விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை (28.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

## வடக்கு, கிழக்கு, புலம்பெயர் தேசம் எங்கும் உணர்வு பூர்வமாக

# மாவீரர் நாள் அனுஷ்டிப்பு

## புலனாய்வின் அதீத கண்காணிப்பிலும் பொதுமக்கள் பெருமெடுப்பில் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது விடிவு ஒன்றையே இலட்சியமாக கொண்டு தம் உயிர்களை தியாகம் செய்து களமாடி உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்களை நினைவு கூரும் நாளான நேற்று தமிழர் தாயகம் எங்கும் உணர்வு எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. (02ஆம் பக்கம் பார்க்க)





## கோப்பாய் துயிலும் இல்லத்தில் இராணுவ தீவிர கண்காணிப்பில்




உணர்வு பூர்வமாக அஞ்சலி

(கோப்பாய்)

இராணுவ ஆக்கிரமிப்பின் பத்தியிலும் மாவீரர் நாள் நினைவஞ்சலி நிகழ்வு கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல முன்றலில் மிகவும் எழுச்சியுடன் உணர்வு பூர்வமாக நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

மாவீரருக்கான அஞ்சலி நிகழ்வில் பிரதான சுடரினை மாவீரர்கள் தந்தை சின்னத்தம்பி அம்புலிங்கம் என்பவர் ஏற்றிவைத்தார். 24

## தொண்டைமானாறு கடற்கரையிலும் சுடரேற்றி அஞ்சலி



04



## எவ்வித அரசியல் கலப்புமின்றி உணர்வு எழுச்சியுடன் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகமான வடகிழக்கில் நேற்றையதினம் நடைபெற்ற மாவீரர் தின நினைவேந்தல்களின் போது மாவீரர்களின் பெற்றோரால் பிரதான சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நடைமுறைகளால் எந்த வித விமர்சனங்களுமின்றி மாவீரர்தினம் இம்முறை சிறப்பாக நடைபெற்றுள்ளது.

வடக்கு கிழக்கில், திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், 24

## வாள்களுடன் பயணித்த இளைஞர்கள் இருவர் சாவகச்சேரியில் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மட்டுவில் - சிவன் கோவில் வீதியில், வாள்களுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல் நெறிவித்துள்ளது. 24

## உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வர்த்தமானியில் குறைபாடு இல்லை

### அமைச்சர் பைசர் முஸ்தபா சபையில் உறுதி



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் எந்தவித குறைபாடும் இல்லை என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூ 24

## கோப்பாய் துயிலுமில்லத்திலும் அஞ்சலி



(கோப்பாய்)

யாழ் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக நேற்று திங்கட்கிழமை மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வும் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றிருந்தது. 24

### உள்ளூராட்சி மன்றங்களுக்கான

## வேட்பு மனு ஏற்பு டிசெ.14இல் திகதி நிறைவு

(கொழும்பு)

93 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் திகதி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக எதிர்வரும் டிசம்பர் மாதம் 11ஆம் திகதி 04

# மாவீரர் நாள்...

குறிப்பாக போருக்கு பின்னர் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் நேற்றைய மாவீரர் தினமே பேரெழுச்சியுடன் மக்கள் திரண்டு அஞ்சலி செய்திருந்தனர். போருக்கு பின்னர் முதல் தடவையாக விடுதலைப்புலிகளின் எழுச்சி பாடல்களுடனும், துயிலுமில்ல பாடல்களுடனும் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. ஒவ்வொரு துயிலுமில்லங்களிலும் ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

மேலும் கடலில் வீர சமராடி ஆகுதியாகிய கடற் புலிகளுக்கும் சாட்டி, முல்லைத்தீவு, தொண்டைமானாறு கடல்களில் அஞ்சலிகள செலுத்தப்பட்டுள்ளது. யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக வடகிழக்கில் உள்ள பெரும்பாலான மாவீரர் துயிலும் இல்லங்களிலும் இவ் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. போர் நிறைவடைந்த பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்கள் பலவற்றை இராணுவத்தினர் அபகரித்து அவற்றில் இராணுவ முகாம்களை அமைத்தும், மேலும் சில துயிலும் இல்லங்கள் காடுகளாலும் பற்றைகளாலும் சூழ்ந்து கிடந்த அவை தற்போது புனரமைக்கப்பட்டன.

அவற்றினை சூழ சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டும் நடுவில் கொடிக்கம்பம் நாட்டப்பட்டும் அஞ்சலி நிகழ்வுகளுக்காக தயார் படுத்தப்பட்டன.

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில், திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வெளியகுளம் மாவீரர் துயிலுமில்லம், தியாகவனம் மாவீரர் துயிலுமில்லம், உப்பாறு மாவீரர் துயிலுமில்லம். மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை மாவீரர் துயிலுமில்லம், தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம், வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லம் அம்பாறை மாவட்டத்தில் உடும்பன்குளம் மாவீரர் துயிலுமில்லம் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம், விசுவமடு தேரவில் மாவீரர் துயிலுமில்லம், துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம், அளம்பில் மாவீரர் துயிலுமில்லம், மணலாறு புனித பூமி மாவீரர் துயிலுமில்லம், மணலாறு உதயபீடம் மாவீரர் துயிலுமில்லம், களிக்காடு மாவீரர் துயிலுமில்லம்,

இறுதியுத்தத்தில் சுதந்திரபுர மாவீரர் துயிலுமில்லம், தேவிபுர மாவீரர் துயிலுமில்லம், இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லம், பச்சைபுல்வெளி மாவீரர் துயிலுமில்லம், இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம, முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம் கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம் மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் மாவீரர் துயிலுமில்லம், ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம், பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், தென்மராட்சி கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லம் வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லம் உள்ளன.

இவற்றில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத துயிலுமில்லங்களில் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இவற்றைவிட யாழ்.பல்கலைகழகத்திலும் மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெற்றன. இதற்காக பல்கலையில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனது நினைவு தூபி மாணவர்களால் புனரமைக்கப்பட்டது. யாழ்.பல்கலையில் நினைவு நிகழ்வுகள் காலையும் மாலையும் என நடைபெற்றன. யாழ். பல்கலை நினைவு நிகழ்வுகள் என்றுமில்லாதவாறு எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று நேற்று காலை பத்து மணிக்கு நல்லூரில் உள்ள திலீபனது நினைவிடத்தில் சுடரேற்றி அங்கிருந்து இராணுவத்தின் கட்டுப்பாடுகளிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களான கோப்பாய், கொடிகாமம், எல்லாங்குளம் ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்னால் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

தொடர்ந்து மாலை 7 மணிக்கு தொண்டைமானாறு கடலிலே மாவீரர்தின நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. மாவீரர் துயிலுமில்லங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வுகள் சரியாக மாலை 6.02 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு மாலை 6.05 மணிக்கு ஈகச்சுடரேற்றல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இராணுவத்தால் உடைத்து அழிக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் மக்கள் மீளவும் கால் பதித்து அச்சங்களை களைந்து தமது வீர மறவர்களை நினைவு கூர தமிழர் தேசம் எங்கும் ஆரம்பித்துள்ளார்கள். மாவீரர் புகழ் பாட ஆரம்பித்துள்ளார்கள். இந்த எழுச்சி ஒரு நாள் இந்த தேசத்துக்கு விடிவை தேடி தரும், மாவீரர்களின் கனவுகளை மெய்ப்பிக்கும் என தற்போதைய மாவீரர் தின அனுஷ்டிப்புக்கள் உணர்த்திகொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-4-9-250-281)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. கா.கோபாலகிருஸ்ணன்**

அமெரிக்க உலகப் பல்கலைக் கழகத்தினால், இலங்கை மன்ற கல்லூரி பிரதான மண்டபத்தில் 28.11.2017ந் திகதியாகிய இன்று நடைபெறும் தொழில் தகைமைசார் பட்டமளிப்பு விழாவில் முதுமாணிப் பட்டத்தினைப் பெறும் திரு. **கா.கோபாலகிருஸ்ணன்** விரிவாக்க முகாமையாளர் - பனை அபிவிருத்திச் சபை அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.எஸ்.சுரேந்திரன்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(சி-528)



## மரண அறிவித்தல்



**கார்த்திகேசு சோமநாதர்**
**(இராசையா விதானையார்)**
**(இளைப்பாறிய கிராம சேவையாளர்- துணுக்காய்)**

துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சோமநாதர் (இராசையா விதானையார்) நேற்று (27.11.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு - சின்னத்தங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், இலட்சுமியம்மா (அழகக்கா) அவர்களின் அன்புக் கணவரும், செல்லையா - பாறுபதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சிவராசன் (ஓய்வுநிலை நிர்வாக கிராம உத்தியோகத்தர்), குமரதாசன் (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற கிருஸ்ணராஜா (கிராமசேவையாளர்), கணநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் வீடமைப்பு அதிகார சபை, கரவெட்டி), பத்மநாதன் (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை), சரவணபவான் (உரிமையாளர்- கஜன் பல்பொருள் வாணிபம், துன்னாலை), சந்திரசேகரம் புவனேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற சௌ. தேவராணி மற்றும் வே.யோகராணி, சி.அருள்ராணி (ப.நோ.கூ சங்கம் நெல்லியடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.மனோரஞ்சிதம், கு.குலதேவி, கி.ஜெயக்குமாரி, க.சகுந்தலாதேவி, ப.சாந்தினி, ச.கமலகுமாரி, சௌந்தரராஜன், வே.வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற சி.சிவராசா, காலஞ்சென்ற சந்திரசேகரம், ஆகியோரின் அன்பு மாமனும், மகாலிங்கம் (சின்னத்துரை), பாக்கியம் (ஆலங்குளம்), காலஞ்சென்ற சபாரத்தினம் (உயிலங்குளம்), காலஞ்சென்ற சின்னத்தங்கைச்சி (செல்லாச்சி - ஆலங்குளம்) ஆகியோரின் மூத்த சகோதரனும், திருப்பதி சண்முகநாதன், காலஞ்சென்ற வீரசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கியான்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவதானம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

தகவல் : பிள்ளைகள், மருமக்கள், குடும்பத்தினர்
0777302714, 0770711127, 0778849509, 0777797748, 0775907543

(சி-527)



## மரண அறிவித்தல்



**திருமதி பாலசுப்பிரமணியம் சுசிலாதேவி (பவளம்)**
**(நாரந்தனை)**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் சுசிலாதேவி (பவளம்) நேற்று (27.11.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - கெங்கமுத்து தம்பதியினரின் ஆசை மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - நாகரெத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், பிரியந்தி (விஜி- கனடா), பிரதீபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குகபாலன் (கனடா), அருள்பிரியா (கஸ்தூரி - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பரமேஸ்வரி (கனடா), சறோஜாதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வைத்திலிங்கம் (கனடா), காலஞ்சென்ற ஜீவநாயகம் (கனடா) மற்றும் தியாகராஜா, கெதிலீஸ்வரி, சரஸ்வதி, பரமேஸ்வரி, சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனியும், அஸ்விதா (கனடா), அபிஜித் (கனடா), அதீஷ் (கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (29.11.2017) புதன்கிழமை கனடா ஸ்காபறோவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனடா,
ஸ்காபறோ.

தகவல் : பிரதீபன் (மகன் -கனடா)
0014167248798


## மறியல் நீடிப்பு

யாழ்ப்பாண மேல நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாது காவலர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கின் சந்தேகத்துக் குரியவர்களது விளக்கமறியல் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் வைத்து கடந்த யூலை மாதம் 22ம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில். நீதிபதியின் மெய்பாதுகாவலர் உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பான வழக்கு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது.

நேற்றைய விசாரணையின் போது அவர்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 11ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/விக்னேஸ்வர வித்தியாலயத்தில் 2017ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தி அடைந்தவர்களையும் 100 புள்ளிக்கு மேல் பெற்றவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: மு/விக்னேஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்கம், சமூகம்

(சி-526)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் உணர்வெழுச்சியுடன் நேற்று மாவீரர் நாள் நிகழ்வுகள் அனுஷ்டிப்பு



தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடி தமது இன்னுயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவுகூரும் வகையில் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் 10 வருடங்களுக்கு பின்னர் நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர்நினைவுத் தூபியில் நேற்றுக் காலை மலரஞ்சலி செலுத்தப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், பல்கலை. ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத் தினர்.இந்த மலரஞ்சலி நிகழ்வை தொடர்ந்து யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத்தினால், மாவீரர்களின் நினைவாக அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப் பட்டன. (படங்கள்: உ.சாளின், பொ.சோபிகா)

# கிழக்கு பல்கலையிலும் உணர்வு பூர்வமாக மாவீரர் நாள் அனுஷ்டிப்பு



(ஏறாவூர்)

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக் கழகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டுள்ளது.


பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், மாண வர் ஒன்றியத்தின் தலைவர் டினேஸ் கார்த் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடை பெற்றுள்ளன.

கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி எம்.ரவி மற்றும் கல்விசார், கல்விசாரா ஊழியர்கள், மாண வர்கள் எனப்பலரும் கலந்து கொண்ட னர். (இ-7)

பிரிஸ்பேன் டெஸ்ட் 5ம் நாள்

## டேவிட் வோர்னர், பான்கிராப்ட் அசத்தல்

# ஆஸி 10 விக்கெட்டுக்களால் வெற்றி



ஆஷஸ் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி வெற்றியுடன் ஆரம்பித்தது. பிரிஸ்பேனில் நடந்த முதல் போட்டியில், பான்கிராப்ட், வோர்னரின் அபார ஆட்டம் கைகொடுக்க, 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி பிரிஸ்பேனில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 302, அவுஸ்திரேலியா 328 ஓட்டங்கள் எடுத்தன. 2ஆவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 195 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. இதனால் 170 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி, நேற்று முன்தினம் 4ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில் விக்கெட் இழப்பின்றி 114 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**சுப்பர் ஜோடி**

நேற்று, 5ஆவதும் இறுதியுமான நாளாட்டம் நடந்தது. வெற்றிக்கு 56 ஓட்டங்கள் மட்டும் தேவை என்ற நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த அவுஸ்திரேலியாவின் பான்கிராப்ட்- வோர்னர் ஜோடி பொறுப்பாக ஆடியது. கிறிஸ் வோக்ஸ் ஓவரில், 3 பவுண்டரிகள் அடித்த பான்கிராப்ட் வெற்றியை உறுதி செய்தார்.

இரண்டாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 173 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பான்கிராப்ட் (82), வோர்னர் (87) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக முதல் இன்னிங்ஸில் சதமடித்து அணியை மீட்ட அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித், தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலிய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் வரும் எதிர்வரும் டிச. 2ஆம் திகதி அடிலெய்டில் ஆரம்பமாகிறது.

**வோர்னர், பான்கிராப்ட் இணை சாதனை**

2ஆவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தின்போது முதல் விக்கெட்டுக்காக 173 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து அவுஸ்திரேலியாவின் வோர்னர், பான்கிராப்ட் ஜோடி, வெற்றிக்கு வித்திட்டது. இதன்மூலம் எந்த ஒரு இலக்கையும் 'சேஸ்' செய்து, முதல் விக்கெட்டுக்காக அதிக ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்த ஜோடி என்ற சாதனை படைத்தது.

இதற்கு முன், 1930இல் அடிலெய்டில் நடந்த மே.தீவுகளுக்கு எதிரான டெஸ்டில், 170 ஓட்டங்களை 'சேஸ்' செய்த அவுஸ்திரேலியாவின் பான்ஸ்போர்ட் (92*), ஜக்சன் (70*) ஜோடி முதல் விக்கெட்டுக்கு 172 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தது.

**தொடரும் ஆதிக்கம்**

கடந்த 1988 நவம்பரில் பிரிஸ்பேன் மைதானத்தில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. இதன் பின், இங்கு நடந்த 29 டெஸ்டில் 22 வெற்றி, 7 சமனிலை பெறுபேற்றை பெற்றுள்ளது. 29 ஆண்டாக இம் மைதானத்தில் தோல்வியே சந்திக்காமல் ஆதிக்கம் செலுத்துகிறது.

## வேட்பு மனு ஏற்பு...

முதல் 14ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களை ஒப்படைக்க முடியும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உடனடி தடையேதும் இல்லாத 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவது என கடந்த சனிக்கிழமை கூடிய தேர்தல் ஆணைக் குழு தீர்மானித்தது. இதற்கமைவாகநேற்றைய தினம் வேட்பு மனுக்களை பொறுப்பேற்பதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதாக தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் பணி நேற்றைய தினத்திலிருந்து இடம்பெறும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கட்டுப்பணத்தை டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி நண்பகல் வரை செலுத்த முடியும். (ம)

## தொண்டைமானாறு...

யாழ்.வடமராட்சி தொண்டைமானாறு கடற்கரையில் நேற்று இரவு 8 மணியளவில் மாவீரர்களுக்கு சுடரேற்றி மலர் தூபி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் கடற்புலி மாவீரர்களின் நினைவாக படகுகளில் சென்று கடலினுள் சுடரேற்றப்பட்டது. பிரதான ஈகச் சுடரினை வட மாகாணஆளும்கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஏற்றி வைத்தார். (ம)

## பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி

## 2018ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரை குத்தகைக்கு வழங்குவதற்கும் சந்தைக்கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கும் கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 28.11.2017 தொடக்கம் 14.12.2017 வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி :- 15.12.2017 பி.ப 1.00 மணி
03. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 15.12.2017 பி.ப 2.00 மணி
04. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- பருத்தித்துறை பிரதேச சபை தலைமை அலுவலகம்

**பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளின் விபரம்**

| இல | சந்தைகள் இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| **புலோலி உப அலுவலகம்** | | | | |
| 01 | மானாண்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 700,000.00 |
| 02 | மானாண்டிச் சந்தை கோழி இறைச்சிக் கடை | 500.00 | 2,000.00 | 61,750.00 |
| 03 | மானாண்டிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2,000.00 | 53,100.00 |
| 04 | மந்திகை பொதுச் சந்தை | 500.00 | 5,000.00 | 1,805,000.00 |
| 05 | மானாண்டி பொதுச் சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | 500.00 | 5,000.00 | 252,700.00 |
| 06 | கெருடாவில் பொதுச் சந்தை | 500.00 | 1,000.00 | 32,000.00 |
| **குடத்தனை உப அலுவலகம்** | | | | |
| 07 | மணற்காடு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 193,000.00 |
| **மருதங்கேணி உப அலுவலகம்** | | | | |
| 08 | மருதங்கேணி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 395,000.00 |
| 09 | மருதங்கேணி பொதுச் சந்தை | 500.00 | 5,000.00 | 95,000.00 |

சந்தைக் கடைகளின் விபரம்

1. மந்திகைச் சந்தைக்கடை

| கடை இல. | கடையின் விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 5 | மந்திகைச்சந்தைக் கடை இல 05 | 330,000.00 | 5000.00 | 1000.00 | 2,750.00 |
| 6 | மந்திகைச்சந்தைக்கடை இல 06 | 330,000.00 | 5000.00 | 1000.00 | 2,750.00 |
| 7 | மந்திகைச்சந்தைக்கடை இல 07 | 330,000.00 | 5000.00 | 1000.00 | 2,750.00 |
| 8 | மந்திகைச்சந்தைக்கடை இல 08 | 420,000.00 | 10000.00 | 1000.00 | 3,500.00 |

2. மானாண்டிச் சந்தைக்கடை

| கடை இல | கடையின் விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | மானாண்டிச் சந்தைக்கடை இல-01 | 102,000.00 | 5000.00 | 1000.00 | 850.00 |
| 2 | மானாண்டிச் சந்தைக்கடை இல-02 | 102,000.00 | 5000.00 | 1000.00 | 850.00 |
| 3 | மானாண்டிச் சந்தைக்கடை இல-03 | 102,000.00 | 5000.00 | 1000.00 | 850.00 |
| 4 | மானாண்டிச் சந்தைக்கடை இல-04 | 102,000.00 | 5000.00 | 1000.00 | 850.00 |

**பொதுவான நிபந்தனைகள்**

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15.12.2017 பி.ப 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையைக் கொண்டுவருவதுடன் அதன் நிழற் படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
3. இவை தொடர்பான விபரங்களை 31.10.2017ஆம் திகதிய வலம்புரிப்பத்திரிகை விளம்பரத்திலும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

**பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான நிபந்தனைகள்**

1. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 21.12.2017ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும்.

**கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான நிபந்தனைகள்**

1. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ளல் வேண்டும்.
2. மூன்று மாத வாடகையை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

**சி.சிறிபாஸ்கரன்**
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

(C-530)

# மாவீரர்களை நினைவுகூர அரசு அனுமதிக்க வேண்டும்

## பிரிட்டன் எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் போரில் உயிரிழந்த போராளிகள் மற்றும் மகனை இலங்கை சுதந்திரமாக நினைவு கூருவதற்கு இலங்கை அரசாங்கம் தமிழர்களை அனுமதிக்க வேண்டும் என்று தமிழர்களுக்கான பிரித்தானிய நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழர்களுக்கான பிரித்தானிய நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் போல் ஸ்கலி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அச்சுறுத்தல்கள் மற்றும் உரிமை மீறல்கள் இந்த ஆண்டும் தொடர்ந்து இடம் பெற்ற போதிலும், வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்கள், அழிக்கப்பட்ட கல்லறைகளை தூய்மைப்படுத்தும், நினைவுகூரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

போரில் இறந்தவர்களை தமிழர்கள் பகிரங்கமாக நினைவுகூருவதற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், நினைவுகூரல் முயற்சிகளை அரசாங்கம் அச்சுறுத்தல்களை விடுத்து தடுத்து வந்துள்ளது.

போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக் கூறும் அரசின் செயற்பாடுகள் மந்தகதியில் இருப்பது கவலையளிக்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாகவும், காலவரையறையுடனும், நடைமுறைப்படுத்துமாறு, ஐ.நா. உறுப்பு நாடுகளுடன் இணைந்து கோருகின்றோம் என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கூன் நோய் ஏற்படுவதிலிருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்க புதிய புத்தகப்பை

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

புத்தகப் பையின் எடை காரணமாகவே அநேக பாடசாலை மாணவர்கள் கூன் நோய்க்கு முகம் கொடுப்பதாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கூனல் நோய் தொடர்பாக அறிவூட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர், புத்தகப் பையின் எடை காரணமாகவே அநேக பாடசாலை மாணவர்கள் கூன் நோய்க்கு முகம் கொடுக்கின்றனர்.

இதன்காரணமாக பாடசாலை மாணவர்களை கூனல் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்க புதிய புத்தகப்பை ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியா,சிங்கப்பூர்போன்ற நாடுகளில் கூன் நோய்க்கு சத்திரசிகிச்சை நடத்தப்படுகின்றது.

கூன் ஏற்படுவதில் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாப்பதற்காக புதிய புத்தகப்பை ஒன்றை அறிமுகப்படுத்துமாறு நிபுணத்துவ மருத்துவர்கள் பரிந்துரை செய்துள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இந்த யோசனையை கருத்தில்கொண்டு அடுத்த வருடம் முதல் புதிய புத்தகப் பையை அறிமுகம் செய்ய உத்தேசித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

கூன் நோயால் கடுமையாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவி வழங்க முடியும். இலங்கையில் இது தொடர்பில் சத்திரசிகிச்சைகளை ஆரம்பிக்க முடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

## மாவீரர் நாள் கொடி



(கரணவாய்)

வடமராட்சி திக்கம் பகுதியில் மாவீரர் தினத்தை முன்னிட்டு கொடி கட்டப்பட்டுள்ளது. திக்கம் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் நேற்று அதிகாலையில் இக் கொடி கட்டப்பட்டிருந்தது. அத்துடன் அப்பகுதியில் சில இடங்களில் கார்த்திகை 27 எனவும் மாவீரர் நாள் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. (இ-60)

## சட்டத்தை நடைமுறைப்படுத்த திணைக்களம்

(கொழும்பு)

புதிய வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்று சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தனியான திணைக்களம் ஒன்றை உருவாக்குவதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இலங்கைக்கு வெளிநாட்டு மூலதனத்தை ஈர்ப்பதே புதிய சட்டமூலத்தின் எதிர்பார்ப்பாகும். இதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிப் பரிமாறல் இலகுபடுத்தப்படும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (இ-7)

## இராசி பலன்

28.11.2017

கார்த்திகை 12, செவ்வாய்க்கிழமை,

சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு

நவமி காலை 6.37 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 01.25 மணிவரை

சுபநேரம் 10.43-12.13 மணிவரை

இராகுகாலம் 03.13-04.43 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி,பரணி<br>காலை 7.10 மணிக்கு<br>மீன-சந் | | ராகு |
| கேது | | | |
| | சனி, புத சூரி | குரு,சுக் | செவ் |

**மேடம்** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை அமையலாம், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**இடபம்** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பதிய பொருட் சேர்க்கைக்கு அஸ்திபாரமிடுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**கடகம்** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் விட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி** சென்ற இடத்தில் செல்வாக்கு இடம்பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், களஸ்திர நன்மையுண்டு.

**துலாம்** தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தேகநலன் சீராகும், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தூரத்திலிருந்து உறவினர் வருகை தரும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர் கள், சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.

**மகரம்** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம்.

**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பார்ப்புகள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** புதியவர்களின் நட்பு கிடைக்கும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.



மாவீரர் நாள் நேற்று நல்லூரில் தியாகி திலீபன் நினைவுத் தூபியில் இடம்பெற்றது. இதன்போது மாவீரர்களின் தாயாரான பாலேந்திரன் ஜெயக்குமாரி பிரதான நினைவுச் சுடரை ஏற்றினார்.

(படங்கள்:-சாளின்,மகாலிங்கம்)

## மாவீரர்களுக்கு அகவணக்கம்



(கரணவாய்)

வடமாகாண சபை உறுப்பினர் கே.தர்மலிங்கம் மாவீரர்களுக்கு சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினார். வடமராட்சி கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இவ் அகவணக்க நிகழ்வு நடைபெற்றது. (இ-60)

# ஆயுதப் போராட்டத் தலைமைகளில் சுற்றுச் சூழல் மீது அக்கறை கொண்டவராகப் பிரபாகரன் மட்டுமே இருந்தார்

## மாகாணசபை உறுப்பினர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

பிரபாகரனை ஒரு ஆயுதப் போராட்டத் தலைவராகவே வெளியுலகம் அறிந்து வைத்திருக்கிறது. அவரைப் பற்றி அறியப்படாத பல பக்கங்கள் உள்ளன. அதில் சுற்றுச் சூழல் குறித்த அவரது அக்கறையும் ஒன்று. உலக சூழல் தினத்துக்காகத் தங்கள் மாணவர் தினத்தையே மாற்றி அமைத்தவர் அவர். நான் அறிந்த ஆயுதப் போராட்டத் தலைமைகளில் சுற்றுச் சூழல் மீது இப்படி அக்கறை கொண்ட ஒரு தலைவராகப் பிரபாகரன் மட்டுமே இருந்தார் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வட மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மரக் கன்றுகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை சிறுப்பிட்டியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியபோது,

விடுதலைப்புலிகள் ஜூன் 5 ஆம் திகதி தங்களது மாணவர் அமைப்பின் ஊடாக மாணவர் தினத்தைக் கொண்டாடி வந்தார்கள். ஜூன் 5 ஆம் திகதி பொன். சிவகுமாரனின் நினைவு தினம். இதனாலேயே, ஜூன் 5 ஆம் திகதியை மாணவர் தினமாகத் தெரிவு செய்து மிக விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

ஐக்கியநாடுகள் சபையால் ஜூன் 5 ஆம் திகதி உலக சூழல் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஒரு தடவை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் உலக சூழல் தினத்தைக் கொண்டாடியது. பேச்சாளராக நானும் போயிருந்தேன். அரங்கில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்தது. மேடையில் இருந்த பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பிரதிநிதிகளிடம் இது தொடர்பாக நான் குறைபட்டுக் கொண்டபோது, அந்நிகழ்ச்சி நடைபெற்ற அதே நேரம் மாணவர் தினமும் கொண்டாடப்பட்டுக் கொண்டிருப்பதால் இந்நிகழ்ச்சியைச் சரியாக ஒழுங்குபண்ண முடியாமல் போனதாகத் தெரிவித்தனர்.






இதன் பின்னர் நான் பேசும்போது, பகிரங்கமாகவே மாணவர் தினத் துக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் சூழல் தினத்துக்கும் கொடுக்க வேண்டும் என்று பேசினேன்.

அப்போதெல்லாம் மக்களின் கருத்தறிவதற்காகச் சந்திக்குச்சந்தி அபிப்பிராயப் பெட்டிகள் இருக்கும். அன்றிரவே தலைவர் பிரபாகரனுக்குச் சுற்றுச்சூழல் தினத்தின் முக்கியத்துவம் குறித்துக் கடிதம் ஒன்றை எழுதி அபிப்பிராயப் பெட்டியில் சேர்ப்பித்தேன். அக்காலப் பகுதியில் கிட்டு பப்பாசி மிகவும் பிரபலமாக இருந்தது. அது குறித்தும் கடிதத்தில் எழுதியிருந்தேன்.

கிட்டு வெளிநாட்டில் இருந்து விதைகளை எடுத்து வந்தமைக்காக அவர் பெயரைப் பப்பாசிக்குச் சூட்டுவது தவறு என்றும், அவ்வாறு சூட்டுவது அந்தப் பப்பாசி ரகத்தைக் கண்டுபிடித்தவரின் அறிவுச் சொத்துரிமையைத் திருடுவது போலாகும் என்றும் குறிப் பிட்டிருந்தேன். எனது கடிதத் துக்குப் பதில் கடிதம் எதுவும் அவரிடம் இருந்து வர வில்லை.

கடிதம் வரவில்லையே தவிர, செயலால் பதில் சொல்லியிருந்தார். அடுத்த சில தினங்களில் அவர்களது பண்ணைகளில் மாட்டப்பட்டிருந்த கிட்டு பப்பாசிப் பெயர்ப் பலகைகள் அகற்றப்பட்டன. அடுத்த வருடத்திலிருந்து அவர்களது மாணவர் தினம் ஜூன் 5 ஆம் திகதியில் இருந்து ஜூன் 6 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. கடைசிவரை ஜூன் 6 திகதியே மாணவர் தினத்தைக் கொண்டாடி வந்தார்கள். ஆயுதப் போராட்டத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் வேறு எந்தத் தலைவரும் இவரைப்போல நடந்து கொண்டிருக்க மாட்டார்கள். அதனால்தான் இவர் தேசியத் தலைவராக இன்றும் எம் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவீரர்களின் பெற்றோர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டிந்தனர். (இ-7)

# வலிகாமம் தெற்கு மற்றும் தென்மேற்கு பிரதேசங்களுக்கு வீதி விளக்குகள்

## வடமாகாணசபை உறுப்பினர் கஜதீபன் ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபை உறுப்பினர்களுக்கான விசேட நிதியொதுக்கீட்டின் கீழ் இருபது இலட்சம் ரூபா பெறுமதியான வீதி விளக்குகளை வலிகாமம் தெற்கு மற்றும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கியுள்ளார்.

இந்நிதியொதுக்கீட்டின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட உடுவில் மல்வம் பகுதியில் இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்த விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இரு பிரதேச சபைகளையும் சேர்ந்த வீதிகளுக்கு சுமார் 600 வீதி விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆசிரியர்களுக்கான முன்சேவை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு 2017 இல் புதிதாக ஆசிரிய சேவை நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களில் உளவியல், புவியியல், குடியியல், வரலாறு ஆகிய பாட ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப அலுவலகத்திலும் சிங்கள பாட ஆசிரியர்களுக்கான முன் சேவைப் பயிற்சி வவுனியா மருக்காரம்பளை மாகாண தொடர்பாடல் தொழில்நுட்ப வளநிலையத்திலும் (PICTEC) 04.12.2017 முதல் 24.12.2017 வரையான காலப் பகுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ், மனைப் பொருளியல் ,விவசாயம், தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம், ஊடகக் கற்கை ஆகிய பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்கான முன் சேவைப் பயிற்சி எதிர்வரும் 11.12.2017 முதல் 31.12.2017 வரையான 21 நாட்கள் வவுனியா/வ/காமினி மகாவித்தியாலயத்தில் நடத்தப் படவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ



நல்லூரைச் சேர்ந்த இலங்கை மனித உரிமைகள் மற்றும் மக்கள் பாதுகாப்பு அமைப்பின் உறுப்பினரும் Career path Institute இன் இயக்குநரும் Viswam campus இன் கிளை இயக்குநரும் The American Academy Of Project Management இன் Srilanka உறுப்பினரும் யாழ். பொஸ்கோ மற்றும் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமான கலாநிதி பரமானந்தம் குருபரன் கடந்த 23 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட ஆர்வமுள்ள பெண்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யுத்தத்தின் பின்னர் வட பகுதிப் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ற தலைப்பில் கடந்த ஜுலை மாதம் தேசிய மாநாடொன்றை நடத்தியிருந்தது. இதன் தொடர்ச்சியாக மாநாட்டில் இனங்காணப்பட்ட சவால்களை எதிர்கொண்டு முன்னகர்வது தொடர்பான செயற்றிட்டங்களை வடிவமைத்து செயற்படுத்தி வருகிறது.

அதில் பெண் தலைமைகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் முக்கியமானவை. இதில் பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டும் என்பதை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்தி வருகின்றது. இதற்காக நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு கொள்ள ஆர்வமுள்ள பெண்களின் இயலாற்றலை மேம்படுத்தும் நோக்கில் கருத்தரங்கொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில இந்தக் கருத்தரங்கு நடைபெறும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சி சார்ந்தோரும் பங்குபற்றவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் புதிய தேர்தல் திருத்தச் சட்ட மூலம் பற்றி யாழ்.மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் த.அகிலன் கருத்துரை வழங்கவுள்ளார். இதனோடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி.கோசலை மதன், "அரசியலதிகாரத்தில் பெண்கள்" என்ற தலைப்பிலும் "உள்ளூராட்சி மன்றக் கட்டமைப்பு மற்றும் அதிகாரம்" தொடர்பாக சு.பரமநாதனும் உரையாற்றுவர். இந்த நிகழ்வின் முடிவில் பெண்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான செயல்முறைத் திட்டமொன்று முன்மொழியப்படும்.

இந்தக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் 021 222 3668 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் தேவநாயகம் தேவானந்த் அறிவித்துள்ளார். (இ

# இராணுவ வாகனத்தின் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

பொலிஸ் கப் வாகனத்தை மோதி விட்டு நிறுத்தாமல் தப்பிச்சென்ற இராணுவ கப் வாகனத்தின் மீது பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்,


திருகோணமலை 10 ஆம் கட்டைப்பகுதியில் இராணுவ கப் வாகனமொன்று, பொலிஸ் கப் வாகனத்துடன் மோதி விட்டு நிறுத்தாமல் செல்வதாக ரொட்டவெவ பொலிஸ் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நிறுத்தாமல் பயணித்த கப் வாகனத்தை ரொட்டவெவ பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் நிறுத்திய போதும், அந்த வாகனம் நிறுத்தாமல் செல்ல முற்பட்டது.

இதன் போது குறித்த கப் வாகனத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்தனர்.

அநுராதபுரம், சாலியபுர இராணுவ முகாமிற்கு சொந்தமான NW DAD - 2292 என்ற வாகனத்தின் மீதே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இராணுவ கப் வாகனத்தின் சாரதி மது போதையில் சென்றதாகவும், சம்பவத்தின் போது வாகனத்தில் ஐந்து பேர் பயணித்ததாகவும் அநுராதபுரம், சாலியபுர இராணுவ முகாமில் கடமையாற்றும் உயரதிகாரி ஒருவரே வாகனத்தை அனுமதியின்றி திருகோணமலைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (இ-7)



(கேலிச்சித்திரம்)

# தடையையும் மீறி மாவீரர்களுக்கு அஞ்சலி



(கரணவாய்)

கோப்பாயில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தச் சென்றவர்களை தடுக்க முற்பட்ட போதும் தடையினையும் தாண்டி சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. நேற்று முற்பகல் 11.45 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த இடத்திற்கு முன்பாக அஞ்சலி செலுத்துவதற்கு வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் வடமாகாண அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், மாவீரர்களின் பெற்றோர், உறவினர் சென்ற போது அவர்களைத் தடுக்க இராணுவத்தினரினால் பேருந்து ஒன்று நிறுத்தப்பட்டு அவர்கள் செல்ல முடியாது தடை ஏற்படுத்தப்பட்டது.

அத்தடையினையும் மீறி பேருந்து நிறுத்தப்பட்டிருந்த இடத்திலுள்ள வீதிக்கு அருகாமையிலே சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-60)

# சம்பந்தரை விட தமிழ் மக்களுக்கு நிறைய செய்துள்ளாராம் கோத்தபாய

(கொழும்பு)

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை விடவும் தாம் தமிழ் மக்களுக்கு சேவையாற்றியுள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எலிய என்ற அமைப்பு இனவாத அமைப்பு என எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

நாங்கள் அவ்வாறு செயற்படவில்லை. எலிய அமைப்பின் மூலம் தீவிரவாதத்தால் பிரிப்பதற்கு முயற்சிக்கப்பட்ட நாட்டை ஒருமித்த நாடாக கொண்டு செல்ல முயற்சிக்கின்றோம் எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தான் இனவாத அடிப்படையில் செயற்படுகின்றார். அவர்களையும் பார்க்க தமிழ் மக்களுக்காக நாம் பெரும் சேவை செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF MEDICINE**

Academic Programme

The Academic Programme for the New Batch (2016 A/L) of Medical Students will commence on Monday, 04th December 2017. An Inauguration Programme will be held on the same day at 8.30 a.m in the Hoover Auditorium, Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil.

It is appreciated that the parents of each student attend this Inauguration Programme.

**Registrar.** (C-522)

**Yarl International College Of Skills Development**
YICSD COLLEGE
மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!



அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்

சனி, ஞாயிறு பிரிவுகள் 03.12.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 04.12.2017 அன்று 10.00 மணிக்கு

பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்தோடு இடம்பெற்று நிறைவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.
அழகுக்கலை பயிற்சிகள் யாவும் Yarl Beauty உடன் இணைந்து வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கண்ணாதிட்டி சந்தி Rolex வேதுப்பகதிற்கும் இடையில்)

**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: வங்கியாளர்
தொ.இ: B/7230

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 25
உயரம்: 160cm
தகைமை/தொழில்: O/L
தொ.இ: B/7231

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம்: 5'6"
இருப்பு: UK PR
தொ.இ: B/7233

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 23.5
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: B/7234

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 45 உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6205

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 55 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/6211

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 2 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/6212

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 28 செவ் 4 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L UK
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6213

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kallyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## 17 ஆயிரத்து 111 விவசாயிகளுக்கு

# 30 கோடியே 88 இலட்சத்து 53 ஆயிரம் ரூபா உரமானியக் கொடுப்பனவாக பகிர்ந்தளிக்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட கம நல அபிவிருத்தித் திணைக் களத்திற்குட்பட்ட 8 கமநல சேவைகள் நிலையங்களின் கீழ் 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான கால போக நெற் செய்கையை 17 ஆயிரத்து 111 விவசாயிகள் 61 ஆயிரத்து 770. 75 ஏக்கரில் மேற்கொண்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 30 கோடியே 88 இலட்சத்து 53 ஆயிரத்து 750 ரூபாவை வழங்குவதற்கான புள்ளி விபரத் தகவல்கள் அரசாங்க த்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகவும் திறைசே ரியில் இருந்து இதற்குரிய பணம் விடுவிக்கப்பட்டதும் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பணம் பகிர்ந்தளிக்கப் படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத் தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழாகவும் மற்றும் கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட நீர்ப்பாசனக் குளங்களின் கீழாகவும் 2017 - 2018 கால போக நெற் செய்கையை மேற்கொண்டுள்ள 17 ஆயிரத்து 111 விவசாயிகளில் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 5 ஏக்கர் நெற் செய்கைக்குரிய உரமானியக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய, கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் கீழ் 5 ஆயிரத்து 54 விவசாயிகள் 19 ஆயிரத்து 829.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 9 கோடியே 91 இலட்சத்து 48 ஆயிரத்து 750 ரூபாவும், இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 312 விவசாயிகள் 3 ஆயிரத்து 895.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 94 இலட்சத்து 78 ஆயிரத்து 750 ரூபாவும், புளியம்பொக்கணைக் கமநல சேவை நிலையத்தின் கீழ் 2 ஆயிரத்து 637 விவசாயிகள் 11 ஆயிரத்து 330 ஏக்கரில் நெற் செய்கையை மேற்கொண்ட நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 5 கோடியே 66 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத் தின் கீழுள்ள ஆயிரத்து 635 விவசாயிகள் 5 ஆயிரத்து 236.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர் களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 2 கோடியே 61 இலட்சத்து 81 ஆயிரத்து 250 ரூபாவும், முழங்காவில் கம நல சேவை நிலையத்தின் கீழுள்ள 862 விவசாயிகள் 2 ஆயிரத்து 271.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 13 இலட்சத்து 56 ஆயிரத்து 250 ரூபாவும், பூநகரி கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 2 ஆயிரத்து 900 விவசாயிகள் 10 ஆயிரத்து 171 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்ப னவாக 5 கோடியே 85 ஆயிர த்து 50 ஆயிரம் ரூபாவும் பளைகமநல சேவை நிலை யத்தின் கீழுள்ள 706 விவ சாயிகள் ஆயிரத்து 642 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 82 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 2 ஆயிரத்து 5 விவசாயிகள் 7 ஆயிரத்து 394.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 3 கோடியே 69 இலட்சத்து 73 ஆயிரத்து 750 ரூபாவுமாக மொத்தம் 17 ஆயிரத்து 111 விவசாயிகளின் 61 ஆயிரத்து 770.75 ஏக்கர் நெற் செய்கைக்கு 30 கோடியே 88 இலட்சத்து 53 ஆயிரத்து 750 ரூபாவை உரமானியக் கொடுப்பனவாக வழங்குவதற்கான நடவடிக்கைளை முன்னெடுத்து வருவதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆண்ணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார். (2-15)

# மாவீரர்களின் பெற்றோர்கள் கண்ணீர்மல்க வீர புதல்வர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்

(கண்டாவளை)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் மாவீரர் பெற்றோர் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.





குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவீரர்களின் பொது உருவப் படத்திற்கு சுடரேற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. இதன்போது வருகைதந்திருந்த மாவீரர்களின்பெற்றோர்கண்ணீர்மல்க வீர புதல்வர்களுக்கு மலரஞ்சலி செலுத்தியிருந்தனர்.




நிகழ்வில் உரையாற்றிய கஜேந்திரகுமார்பொன்னம்பலம்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆயுதக் குழுக்களாக செயற்பட்டவர்கள் இன்று மாவீரர்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கின்றனர்.

யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் விடுதலை புலிகளை அழிக்க உதவிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் இன்று மாவீரர்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கின்றனர். இவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து எவ்வாறு செயற்பட்டார்கள் என்பது நாம் நன்கு அறிவோம். இதேவேளை இன்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பிரபாகரன் ஏற்றுக் கொள்ளாத 13 ஆம் திருத்த சட்டத்திற்கு ஒப்பான ஒற்றை ஆட்சி தொடர்பில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக்கு ஆதரவு வழங்கும் வகையில் செயற்படுகின்றனர். இவர்கள் கிளிநொச்சியில் உள்ள உங்களிடமும் வருவார்கள் என மேலும் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட சுமார் நூற்றிப் பத்து மாவீரர் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இணைப்பாளர் ஜெகா, கட்சி உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-315-312)

# மாவீரர் தினம் அனுஷ்டிக்க சர்வதேச அழுத்தமே காரணம்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தெரிவிப்பு



(பரந்தன்)

மாவீரர் தினத்தை தாயகத்தில் அனுஷ்டிக்க சர்வதேச அழுத்தங்களே காரணம் என வடக்கு மாகாண சபை உறுப்பினரும் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்ல பணிக் குழுத்தலைவருமான பசுபதிப் பிள்ளை தெரிவித்துள்ளார்.

திருநகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் வட்டார பணிக்குழு செயலாளர் வேலமாலிதன் தலைமையில் நேற்று முந்தினம் நடைபெற்ற திருநகர், கணேசபுரம், ஜெயந்திநகர் வட்டாரத்தில் உள்ள மாவீரர் பெற்றோர் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவீரர் தின நிகழ்வு மற்றும் மாவீரர் பெற்றோர் கௌர்விக்கும் நிகழ்வு சாதாரணமாக நிகழ்ந்தவை அல்ல. நடந்த இனப்படுகொலை மற்றும் இசைப்பிரியா ஆகிய இன்னும் பல போராளிகள் சின்னாபின்னமாக சிதறடிக்கப்பட்ட நிலைமைகள் உலகுக்கு கொண்டுவரப்பட்டதன் அடிப்படையில் சர்வதேச நிலைமாறு நீதிப் பொறிமுறை ஜெனிவாவில்கொண்டு வரப்பட்டதனால் அரசு ஒரு தளர்வை ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் அச்சுறுத்தல்கள் கண்காணிப்புக்கள் தொடர்கின்றது. ஆனாலும் கொள்கையில் மாற்றம் இல்லாமல் பயணிக்கின்றோம். இறை நீதியின் அடிப்படையிலும் இயற்கை நீதியின் அடிப்படையிலும் சத்தியமான போராட்டங்கள் தோற்பதில்லை. அக்காலம் மீண்டும் வரும்போது மகிழ்ச்சி அடையாவிடினும் ஆறுதல் அடைய முடியும் என தெரித்தார்.

மேலும் வட்டார பணிக் குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் வட்டார ரீதியாக மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# முல்லைத்தீவில் மீனவர்களுக்கு வீடுகளை அமைக்க காசோலை, காப்புறுதி வழங்கப்பட்டன






(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண மீன்பிடியை அபிவிருத்தி செய்யும் முகமாக வடக்கு மாகாண நிதியுதவியின் மூலம் முல்லைத்தீவு வவுனிக்குளத்தில் மீன் குஞ்சு விடும் நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது.

முற்பகல் 11.30மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் க.சிவநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவின் அழகிய வீடு என்ற மீனவர்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக மீனவ சமூகத்தைச் சேர்ந்த இருபது பேருக்கு தலா 50ஆயிரம்ரூபா காசோலை வழங்கப்பட்டதோடு, மீனவர்களுக்கான காப்புறுதியும் வழங்கப்பட்டது.


மேற்படி நிகழ்வில் மாகாண நீர்வள முகாமைத்துவ பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், மாவட்ட உத்தியோகத்தர்கள், தொழில் நுட்ப அலுவலர்கள் பிரதேச செயலகத்தின் நிர்வாக சபை உத்தியோகத்தர், பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)


கனகபுரம்




வன்னிவிளாங்குளம்




இரணைப்பாலை


முள்ளியவளை


தேராவில்

தாயக விடுதலைக்காகத் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய வீரமறவர்கள் துயிலும் மாவீரர் துயிலும் இல்லங்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்காக மஞ்சள் சிவப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு நேற்று எழுச்சி கொண்டிருந்தன.

மாவீரர் எழுச்சிக் கீதங்கள் நேற்று காலையிலிருந்து ஒலிக்கப்பட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப்புலிகள் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் கனகபுரம்,தேராவில், முள்ளியவளை, இரணை ப்பாலை, வன்னி விளாங்குளம் ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்கள் எவ்வாறு இருந்த னவோ அவ்வாறே இவ்வாண்டும் மாவீரர் நாளான நேற்றும் விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:-பனிக்கன்குளம், பரந்தன் செய்தியாளர்கள்)

# வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் போராட்டத்தில் இணைந்திருந்த தந்தையொருவர் உயிரிழந்தார்

## இரு சிறுநீரகங்களும் பாதிப்படைந்த நிலையில்

(மல்லாவி )

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட தனது மகனை மீட்பதற்காக வவுனியாவில் நடைபெற்று வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்தில் இணைந்திருந்த 74 வயதுடைய வயோதிபத் தந்தை ஒருவர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனின் முகத்தை பார்க்க முடியாத ஏக்கத்துடன் மரணமடைந்துள்ள துயரச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,


வன்னியில் இடம் பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்திற்கு பின்னர் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து கடந்த 2009 ஆம் ஆண்டு தனது மகனை இராணுவத்தினரிடம் வவுனியாவைச் சேர்ந்த எஸ் அரியரட்ணம்(வயது - 74) என்ற வயோதிபத் தந்தை ஒருவர் கையளித்துள்ளார்.

தனது மனைவியுடனும் மற்றும் வலிந்து காணாமல் போயுள்ள மகனின் 2 பிள்ளைகளுடன் இணைந்து கடந்த 8 வருடங்களாக தமது மகனை பல்வேறு இடங்களிலும் தேடி அலைந்தும் தகவல் எதுவும் கிடைக்காத நிலையில் வவுனியா நகரப் பகுதியில் நடைபெற்று வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்தில் தானும் கலந்து கொண்டு தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக அவரது இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 10 நாட்களாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் தொடர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இதுவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் முன்னெடுத்து வரும் போராட்டத்தில் இணைந்திருந்த 5 பேர் வலிந்து காணாமல் போன தங்களின் பிள்ளைகளின் முகங்களை காணாமல் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு சுடரேற்றி அஞ்சலி



(பரந்தன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சந்திப்பகுதியில் 1990 ஆம் ஆண்டு விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட 12 பொதுமக்களின் 27ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் பகுதியில் கடந்த 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி இதே நாள் இலங்கை விமானப்படையினர் மேற்கொண்ட வான் தாக்குதலில் 12 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதன் 27ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு நேற்று வன்னிக்குறோஸ் அமைப்பின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டானில் நடைபெற்றுள்ளது.

இதில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள், பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டு சுடரேற்றி வணக்கம் செலுத்தினர். (2-4-312)

# இளைஞர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி இருக்கின்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



(கண்டாவளை)

எமது மண்ணில் இளைஞர்கள், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி இருக்கின்ற சூழல் எங்களுக்குள் உருவாக்கப்பட்டிருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கனடா நாட்டின் புலம் பெயர் உறவுகளினுடைய நிதியில் சாந்தபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட அப்பளத் தொழிற்சாலைக்கு புலம்பெயர் உறவுகளான பத்மநாதன் சிவநாதன் ஆகியோர் வழங்கிய சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதியை அதன்ஸ்தாபகரான அருட்தந்தை யூட்அமலதாஸிடம் நேற்று முன்தினம் கிளிநொச்சி சாந்தபுரத்தில் வைத்து வழங்கி உரையாற்றுகையில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இங்கு நிறுவப்படுகி ன்ற அப்பளத்தொழிற்சாலை யின் உற்பத்திப்பொருளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அதன் மூலம் வருமானத்தை ஈட்ட முடியும். நாங்கள் சிறு சிறு தொழில்களை தேடிக் கொண்டிருக்கின்றோம்.

நாங்கள் உழைக்கக்கூடிய வருமானம் பெறக்கூடிய காணிகள் இன்றும் இராணுவத்திடம் உள்ளது. நாங்கள் தொழில் தேடிச் சென்றால் தொழில் கிடைக்காது போகின்றது.

தொழில்மயப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளை உருவாக்குதல் கூட இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை.வட்டக்கச்சி விவசாயப்பண்ணை ஆகியவற்றை இயங்க வைத்து சுமார் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் திட்டம் எதையும் கொண்டுவரப்படவில்லை.

நாங்கள் இவ்வாறான சூழலுக்குள் இருந்துதான் நாங்கள் அரசியல்ரீதியான தீர்வுகள் என்ற அடிப்படையில் தான், எங்கள் முயற்சிகளை முன்னெடுக்கின்றோம். அதே வேளை மக்களுக்கான வாழ்வாதாரப் பிரச்சினைக்கான தீர்வை எட்டவேண்டியிருக்கின்றோம்.

எங்களுடைய மண்ணின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய வகையில் அவர்களது பொருளாதார மேம்பாடு சரியான பாதையில் கொண்டு செல்லப்படுவதற்கு இவ்வாறான தொழிற்சாலைகள் மிகமிக முக்கியமானது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராஜா, கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் இராஜேந்திரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)



# விவசாயிகளின் பெயர்ப்பட்டியல்கள் அனுப்பிவைப்பு வங்கிக் கணக்கிற்கு மானிய நிதி அனுப்பப்படும்

(பூநகரி)

பூநகரி கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட 20 கமக்கார அமைப்புக்களின் பகுதிகளில் 2017ஆம் ஆண்டு காலபோக நெற் செய்கை 10ஆயிரத்து 188 ஏக்கர் விதைக்கப்பட்டு அரச உரமானியம் பெறுவதற்காக மேற்படி அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகள் விண்ணப்பித்துள்ளார்கள். மொத்தமாக 2ஆயிரத்து 901 விவசாயிகள் காலபோக நெற் செய்கையில் ஈடுபட்டுள்ளதாக கமநல சேவைகள் நிலையத் தகவல் தெரிவிக்கின்றது.

உரமானியத்துக்காக விண்ணப்பித்துள்ள விவசாயிகள் உரமானிய நிதி கிடைக்கும் படசத்தில் தங்களின் வேளாண்மையை செய்து முடிக்க முடியுமென தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கமநல சேவை நிலையத்தினரிடம் வினவிய போது அனைத்து பெயர் பட்டியல்களும் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவரவர் வங்கி கணக்கிற்கு உரமானியநிதி அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-84)





தமிழ்த் தேசிய நினைவெழுச்சி நாளை முன்னெடுத்து மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மாவீரர்களின் பெற்றோரால் ஈகச் சுடர் ஏற்றப்பட்டு, மாவீரர்களின் கல்லறைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் முகமாக மாவீரர்களின் பெற்றோர் 100 பேருக்கு மரக்கன்றுகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டன.
(படங்கள்:- பொ.சோபிகா)

## தேர்தல் தாமதம்; ஜனாதிபதியும் பிரதமரும் கூட்டாக இணைந்து உறுதிப்படுத்தவும்

# ஐ.தே.க.அமைப்பாளர் கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை கால தாமதப்படுத்தாது நடத்துவதை, ஜனாதிபதியும் பிரதமரும் கூட்டாக இணைந்து உறுதிப்படுத்த வேண்டும் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பிரதான அமைப்பாளர் சி.வை. பி.ராம் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில், அவர் நேற்று முன்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்ச்சியாக காலதாமதப்படுத்தும் நிலைமையே காணப்படுகின்றது.

இரண்டரை வருடங்களுக்கு மேலாக இவ்வாறான நிலைமையே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

"உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் காலதாமதப்படுத்துவதால் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் அதே நேரம், அவர்களுக்கான ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்டே வருகின்றன.

"புதிதாக எல்லை நிர்ணயம், சட்டத் திருத்தங்கள் அனைத்தும் நிறைவடைந்துள்ள போதும், தேர்தலை நடத்தமுடியாது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதனால், தற்போது மக்கள் மேலும் ஏமாற்றமடைந்துள்ளதோடு, அரசியல் கட்சிகளும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

"குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சியானது, வேட்பாளர்கள் தெரிவு உள்ளிட்ட பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில், தற்போது காலதாமதப் படுத்தப்படுவதானது, வெகுவாக கவலையளிப்பதாகவுள்ளது.

"ஆகவே, இந்த விடயத்தில் பிரதான கட்சிகளின் தலைவர்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடியாக சந்தித்து, இரு தரப்பு இணக்கப்பாடுகளை எடுத்து, விரைவில் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

"மேலும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தேர்தலை நடத்துவதற்கு தயாராகவுள்ளபோதும், சட்ட ரீதியாகவுள்ள சிக்கல்களை உடனடியாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர், அதிகாரிகள் முடிவுக்கு கொண்டு வருமாறு பகிரங்கமாக கோருகின்றேன்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதியால் ஹோட்டல் திறப்பு



(கொழும்பு)


கண்டியில் சுற்றுலா பயணிகளின் வசதிகளை மேலும் அதிகரிக்கும் வகையில் நவீன ஹோட்டல் ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. கண்டி, அங்பிட்டிய பிர தேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கோல்டன் க்ரவுன் என்ற ஹோட்டல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுற்றுப்புற சூழலுக்கு ஏற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த சொகுசு ஹோட்டலில் 90 அறைகள் காணப்படுகின்றன.

ஹோட்டலை திறந்து வைத்த ஜனாதிபதி அங்கு விசேட விருந்தினர் புத்தகத்தில் பதிவொன்றையும் இட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வரணியில் புலிக்கொடி




(யாழ்ப்பாணம்)

வரணி வைத்தியசாலைக்கு அருகிலலுள்ள பேருந்து நிலையத்தில் நேற்றையதினம் இனம் தெரியாத நபர்களால் புலிக்கொடி பறக்கவிடப்பட்டது. (இ-10-103)

# பாரிய நிதிப்பற்றாக்குறையை எதிர்நோக்கும் அமைச்சர்கள்

(கொழும்பு)

பல அமைச்சுக்கள் நிதிப்பற்றாக்குறையை எதிர்நோக்கி வருவதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இறுதி நான்கு மாதங்களுக்கான அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, அமைச்சுக்களுக்கு வழங்கப்படவில்லை என கொழும்பு வார இறுதி ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியே இவ்வாறு அமைச்சுக்களுக்கு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சில அமைச்சுக்கள் கடும் நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அபிவிருத்தி திட்டங்களுக்காக சுமார் 8,000 கோடி ரூபா நிதி அமைச்சுக்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் சிலர் இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மேலும், சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு, மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு போன்றனவே அதிகளவில் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# 570 மாணவர்களுக்கு வகுப்புத் தடை 37 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

நாட்டின் பல்கலைக்கழகக் கட்டமைப்பில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 570 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் 37 மாணவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இருவரின் தகுதிநிலை இரத்து செய்யப்பட்டுள்ளதாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்? வகுப்புத் தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர் என்றார்.

இந்தக் கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கும் போது, 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 570 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 37 மாணவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இருவரின் தகுதிநிலை இரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் 193 பேரும், பேராதனையில் 105பேரும், சப்ரகமுவவில் 83 பேரும், மொரட்டுவையில் 47பேரும், ருஹுணுவில் 43 பேரும் கிழக்கில் 31 பேரும், தென்கிழக்கில் 12 பேரும், இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்தில் 15 பேரும், களனியில் 11பேரும், யாழில் 9 பேரும், இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தில் 10 பேரும், கொழும்பில் 8 பேரும், சுதேச மருத்துவ கற்கை நிறுவகத்தில் ஒருவரும், கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கற்கை நிறுவகத்தில் 2 பேருமாக மொத்தம் 570 பேர் வகுப்பு தடைக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன் இந்த காலப்பகுதியில் ரஜரட்ட, ஊவா வெல்லஸ்ஸ, சுவாமி விபுலானந்தா அழகியற்கலை நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம் ஆகியவற்றில் எந்தவொரு மாணவர்களும் வகுப்பு தடைக்கு உள்ளாகவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தபாயவை கைது செய்தால் தென்னிலங்கையில் போராட்டம்

## கூட்டு எதிரணி தீர்மானம்



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்தால் தென்னிலங்கையில் பாரிய மக்கள் போராட்டம் நடத்த பொது எதிரணி தீர்மானித்துள்ளது. இரகசிய சந்திப்புகள், மக்கள் கூட்டங்களை நடத்த ஏற்பாடுகளும் மும்முரமாக இடம்பெற்று வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ள நிலையில் கோத்தா ஆதரவு அமைப்புகள், அரசியல் கட்சிகள், பொது எதிரணி ஆகிய இணைந்து மறைமுக சந்திப்புகளையும், பல்வேறு ஏற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றன. கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்தால் அடுத்ததாக தாம் எடுக்கும் நகர்வுகள் குறித்து ஆராய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் பொது எதிரணியினர் விசேட சந்திப்பொன்றை முன்னெடுத்தனர். இந்த சந்திப்பின் போது சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக தென்னிலங்கையில் மக்கள் கூட்டங்களை ஒன்றிணைத்து பாரிய அளவில் போராட்டங்களை நடத்தவும், கொழும்பிலும் வேறு சில பகுதிகளிலும் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில் இக் கூட்டத்தில் கலந்துகொண்ட பொது எதிரணியின் உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவிடம் இது குறித்து வினவியபோது அவர் கூறியதாவது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அவரது சகாக்களுக்கும் எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு வரும் நிலையில் அவை குறித்து நாம் மக்களிடம் உண்மைகளை வெளிப்படுத்தி வரும் நிலையிலேயே இன்று எமக்கு எதிராக இவ்வாறான பழிவாங்கல் நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனக்கு எதிராகவும் சில குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு என்னையும் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் இந்த நாட்டை காப்பாற்றிய முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் கைது செய்ய பாரிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவரை கைது செய்தால் இந்த நாட்டில் தென்னிலங்கையில் குழப்பங்கள் ஏற்படும். அவ்வாறான நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்ற காரணிகளை ஆழமாக கலந்துரையாடினோம். அவரை கைதுசெய்வது உறுதியாக தெரிய வந்தால் அதற்கு எதிராக நாட்டின் சிங்கள மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்.

எனவே மக்களை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். தெற்கின் பலம் என்னவென்பதை இந்த அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதற்கான சரியான வாய்ப்புக்காக நாம் காத்திருக்கின்றோம். எவ்வாறாயிருப்பினும் இந்த நாட்டை நேசித்த, இந்த நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நபர்களை தண்டிக்க ஒருபோதும் மக்கள் இடமளிக்கப் போவதில்லை. ஆகவே இந்த விடயங்கள் குறித்து கூட்டத்தில் ஆராய்ந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அஷ்ரப் மரணம் அறிக்கை மாயம் தேட உத்தரவு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத்தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எம்.ஏ. அஷ்ரப் உள்ளிட்ட 14 பேர் பலியான சம்பவம் தொடர்பில், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, காணாமல் போயுள்ள முக்கிய ஆவணத்தைத் தேடுமாறு தகவல் அறியும் உரிமை ஆணையகம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் அதன் ஆரம்பத் தலைவருமான எம்.எச்.எம். அஷ்ரப், விமான விபத்தொன்றில் மரணமடைந்த சம்பவம் தொடர்பில், கண்டறியவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை மாயமாகியுள்ளதாகத் தகவல் அறியும் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்தே, அந்த ஆணைக் குழு மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

2000ஆம் ஆண்டில், அஷ்ரப் பயணித்த இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் உடைந்து விழுந்ததில் அதில் பயணித்த 14 பேர் பலியாகினர். அந்தச் சம்பவம் தொடர்பில் பல்வேறான தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதையடுத்து, அந்தச் சம்பவம் தொடர்பில் தேடியறிந்து அறிக்கையிடுவதற்காக, அன்று ஆட்சியிலிருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை நிறுவினார்.

நீதியரசர் எல்.கே.பி. வீரசேகரவின் தலைமையில் நியமிக்கப்பட்ட அந்த ஆணைக் குழு, தன்னுடைய விசாரணையின் முடிவில் தயாரித்த அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் கையளித்தது.

இந்த விசாரணை அறிக்கை, 2007 ஜனவரி முதலாம் திகதியன்று, ஜனாதிபதி செயலகத்திலிருந்து, தேசிய ஆவணவாக்கல் காப்பகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த ஆவணம் மாயமாகியுள்ளதாக, அதன் அதிகாரிகள், தகவலறியும் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளனர்.

அஷ்ரப் மரணம் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதியை, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக முன்னாள் பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவுத், தகவலறியும் சட்டத்தின் கீழ் கேட்டிருந்தார். எனினும், அந்தக் கோரிக்கையை, ஜனாதிபதி செயலகம் நிராகரித்திருந்தது.

அதன்பின்னர், முன்னாள் பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவுத், அது சம்பந்தமாக, தகவலறியும் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்திருந்தார். அந்த மேன்முறையீட்டை, அவ்வாணைக்குழுவின் தலைவர் மகிந்த கம்மன்பில, உறுப்பினர்கள் குழு விரிவாக ஆராய்ந்தது.

இதுதொடர்பில், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் மேலதிக செயலாளர் (சட்டம்), ஆணைக்குழுவின் முன்னிலையில் விளக்கமளித்துள்ளார். அதன்பின்னர், அந்த ஆவணத்தை, தேசிய ஆவணவாக்கல் காப்பகத்திடம் செயலாளர் கோரியுள்ளார். அந்த ஆவணம் மாயமாகியுள்ளதாக அவருக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக, தேசிய ஆவணவாக்கல் காப்பகத்தின் அதிகாரியை, ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு, ஆணைக்குழு நோட்டீஸ் அனுப்பிவைத்துள்ளது.

இந்தச் சம்பவத்தால், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 8 மில்லியன் ரூபாய் நிவாரணத் தொகை செலுத்தப்படல் வேண்டும். அறிக்கையின் 69,70 மற்றும் 71 ஆகிய பக்கங்களின் மென் பதிப்பை, ஆணையகம் வெளியிட்டிருந்தது.

2007ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த 3 பக்கங்கள் மாத்திரமே மிஞ்சியிருந்தன. மேலும், இந்த விபத்து வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டதோ அல்லது வெடிப்புச் சம்பவத்தால் ஏற்படுத்தப்பட்டதோ அல்லது வெடிக்கும் சாதனத்தால் ஏற்படுத்தப்பட்டதோ அல்ல என்றும் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தாலும் கவனமின்மை காரணமாகவுமே இடம்பெற்றது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. (இ-7)

# உள்ளூராட்சி தேர்தல் வர்த்தமானியில் எந்தவித குறைபாடும் இல்லையாம்

## துறைசார் அமைச்சர் பைஸர் விளக்கம்

(கொழும்பு)

மோல்டா நாட்டிற்கு உரிய அனுமதியைப்பெற்றே சென்றதாக மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் எந்தவித குறைபாடும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தின் 15ஆம் நாள் நேற்றாகும். இதன்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு, பெண்கள் மற்றும் சிறுவர் நடவடிக்கைகள் , சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் தொடர்பிலான அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடு தொடர்பில் விவாதம் ஆரம்பமானது. இதன்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை தெரிவித்தார்.

மோல்டா நாட்டில் உள்ளூராட்சி மன்ற மாநாடு நடைபெற்றது. இதற்கு இலங்கைக்கும் அழைப்பு கிடைத்தது.

ஜனாதிபதியின் அனுமதியுடன் மோல்டாவுக்கு சென்றேன். நாட்டை விட்டு ஓடவில்லை. நாட்டின் தலைவரின் அனுமதி பெற்றேன். அமைச்சரவை ஆவணத்திலும் இதனை நான் குறிப்பிட்டேன். நான் சட்டத்தரணி. எனக்கெதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. நான் எனது பதவியை கேலிக்குட்படுத்த மாட்டேன்.

எனது ஜனாதிபதி சட்டத்தரணி பதவி பெறுமதிமிக்கதாகும். ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கே செயற்பட்டேன். நாட்டிற்கும் அரசியல் கட்சிக்கும் நீதியை நிறைவேற்றுவேன். தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு தயாரிக்கப்பட்ட போது அது தொடர்பாக அனைத்து கட்சிக்கும் தெளிவுபடுத்தினேன். வர்த்தமானியில் குறைபாடுகள் இல்லை. பொறுப்புடன் நான் இதை கூறுகின்றேன். தற்பொழுது இடைக்கால உத்தரவே வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் பொறுப்புடன் உண்மையாக செயற்பட்டேன். பொதுமக்கள் நீதி மன்றத்திற்கு செல்லத்தயார். குளறுபடியான வர்த்தமானி தயாரிக்கப்படவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு இதில் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சட்டவிரோத மணலுடன் வந்த வாகனம் பொலிஸாரால் பறிமுதல்




(கரணவாய்)

நெல்லியடிப்பகுதியில் சட்டவிரோதமானமுறையில்மணல் ஏற்றிவந்த வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கரணவாய் மண்டான் பகுதியூடாக சென்று கொண்டிருந்த வாகனத்தை பொலிஸார் சோதனையிட்ட போது மணல் ஏற்றி வந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (இ -60)

# சர்வோதயத்தால் வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வோதய நிறுவனத்தினால் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்காக வேலைவாய்ப்புடன் கூடிய மோட்டார் வாகனத் துறை மற்றும் விருந்தோம்பல் சுற்றுலாத்துறையில் தொழிற்பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

NVQ Level-3, Level 4 அரச சான்றிதழுடன் ஆறு மாத காலங்களைக் கொண்ட இப் பயிற்சி நெறியானது முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

அந்த வகையில் மோட்டார் வாகனத்துறை மற்றும் விருந்தோம்பல் சுற்றுலாத் துறை ஆகிய துறைகளில் வேலைவாய்ப்புக்கள் காணப்படுவதனால் எமது இளைஞர், யுவதிகள் இப் பயிற்சி நெறியில் இணைவதன் மூலம் நிரந்தர தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வது மட்டுமல்லாது தங்கள் குடும்ப வருமானத்தையும் அதிகரித்துக் கொள்ள முடியும் என்றும் விண்ணப்பதாரிகள் நேரடியாக யாழ். சர்வோதய மாவட்ட நிலையம் இல. 568, நெடுங்குளம் சந்தி, ஏ-9 வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சமுகம் தருமாறு யாழ். மாவட்ட சர்வோதய இணைப்பாளர் சி.யுகேந்திரன் தெரிவித்துள்ளார். (இ-134)

# தேசியக் கொடி விவகாரம்

# அரசு வடக்கு விடயத்தில் மௌனம் காக்கக்கூடாது

## தூண்டிவிடுகிறது மல்வத்துபீடம்

(கொழும்பு)

சிங்கக்கொடிக்குப் பதிலாக புலிக்கொடி வேண்டும் என்ற நிலைப்பாட்டில் வடமாகாண சபை செயற்படுவது கண்டிக்கத்தக்கதாகும். தேசிய கொள்கை, தேசியக் கொடியை ஏற்றுக்கொள்ளாது இலங்கையில் எவ்வாறு வாழ்வது? ஆகவே அரசாங்கம் வடக்கு விடயத்தில் மௌனம் காக்கக்கூடாது என மல்வத்து மாநாயக்க பீடம் தெரிவித்துள்ளது.

கண்டி தலதாமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பௌத்த மத நிகழ்வொன்றில் மல்வத்து மாநாயக்க பீடம் மற்றும் அஸ்கிரிய பீடம் உள்ளிட்ட மாநாயக்க தேரர்கள் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மல்வத்து பீடத்தின் அனுநாயக்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தேசியக் கொடி வேண்டாம், தேசிய கொள்கையினை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைப்பாட்டில் வடமாகாண சபை செயற்பட்டு வருகிறது. அதேபோல் அவர்கள் சிங்கக் கொடிக்குப் பதிலாக புலிக்கொடியை கோரி நிற்கின்றனர்.

தற்போதுள்ள கொடியை மாற்றியமைத்து புலியின் ஏதேனும் ஒரு அடையாளத்தை தேசியக் கொடியில் பொறிக்குமாறும் அவர்கள் போராடி வருகின்றனர். இது மிகவும் மோசமான நிலைமையாகும். இன்று வடமாகாணசபை செயற்படும் விதம் இந்த நாட்டு மக்களினால் ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் அமைந்துள்ளது.

நாட்டின் முக்கிய பீடங்களான நாம், இந்தச் செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கின்றோம். நாட்டின் ஐக்கியத்தை அழிக்கும் வகையிலும், குழப்பங்களை ஏற்படுத்தும் வகையிலும் மக்கள் மத்தியில் மீண்டும் பிரச்சினைகளை தோற்றுவிக்கும் வகையிலும் இவர்களில் சிலர் செயற்படுவது குறித்து எமது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றோம்.

அரசாங்கம் இவர்களின் விடயத்தில் மௌனம் காப்பது பொருத்தமானதல்ல. உடனடியாக இவர்களின் விடயத்தில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்போதே இவர்களின் செயற்பாடுகள் மோசமாகும் போது அதிகாரங்களை வழங்கிய பின்னர் நிலைமைகள் இன்னும் மோசமானதாக அமையும்.

மாநாயக்க தேரர்கள் இந்த அரசாங்கத்தின் சில செயற்பாடுகள் குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர். அரசியல் அமைப்பு விடயத்திலும், வடக்கின் இன்றைய சில செயற்பாடுகள் குறித்தும் நாம் எமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளோம். ஆகவே அரசாங்கம் இந்த விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# பட்டமளிப்பு விழா இன்று

(கொழும்பு)

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இன்று இடம்பெறும், தொழில் தகைமைசார் பட்டமளிப்பு விழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பேர், கலாநிதி மற்றும் முதுமாணிப் பட்டத்தைப் பெறுவர்.

நல்லாட்சிக்கான தென்னாசிய கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் அமெரிக்க உலகப் பல்கலைக்கழகத்தினால், இன்று கொழும்பு இலங்கை மன்ற கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடத்தப்படும் இந்த தொழில் தகைமைசார் பட்டமளிப்புவிழாவில், யாழ் மாவட்டத்தை சேர்ந்தவர்களான யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.சிவராசா, பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் பா. சுதாகரன், ஏஞ்சல் சர்வதேச ஆங்கிலப் பாடசாலையின் பிரதி அதிபர், திருமதி.அம்பிகா ராஜரட்ணம், ஆகியோர் கலாநிதிப் பட்டத்தினையும் பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர் (விரிவாக்கம்) கா.கோபாலகிருஸ்ணன் முதுமாணி பட்டத்தினையும் பெறுவர். (இ-9)

# உயிரே போனாலும் இனி பிரியமாட்டோம்

## முதல்வர் பழனிச்சாமி உறுதி



(சென்னை)

உயிரே போனாலும் இனிமேல் இணைந்த அணிகளுக்குள் பிரிவு இல்லை என தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சென்னை - ராயப்பேட்டையிலுள்ள அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கட்சி ஆலோசனைக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த போதே பழனிச்சாமி இதனைக் கூறியுள்ளார்.

ஜெயலலிதாவின் மறைவிற்கு பின்னர் அ.தி.மு.கவானது பழனிச்சாமி, பன்னீர் செல்வம் மற்றும் டி.டி.வி. தினகரன் என்ற வகையில் முத்தரப்பாக பிளவுபட்டு கருத்து வேறுபாடுகளால் மோதிக் கொண்டன.

அதன் பின்னர் பழனிச்சாமி மற்றும் பன்னீர்செல்வம் தரப்பினர்களுக்கிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று பிரிவடைந்த அந்த அணிகள் இரண்டும் ஒன்றாக இணைந்து கொண்டன.

எனினும், தற்போதும் கட்சிக்குள் பிளவுகள் இருப்பதாகவும், உட்பூசல்கள் வெடித்து வருவதாகவும் பல்வேறு விதமான விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வந்தன.

இந்த நிலையில் குறித்த விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளிவைக்கும்விதமாகவே பழனிச்சாமி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், அ.தி.மு.கவிற்குள் பிளவு இருப்பதாக போலியான விடயங்களை சிலர் சித்திரித்து வருகின்றார்கள். எனினும் அதில் உண்மைத் தன்மை இல்லை எனக்குறிப்பிட்ட அவர், புரட்சித்தலைவி அம்மா அணி ஒன்றுதான் இனிமேல் உயிர்பிரிந்தாலும் நாம் பிரிய மாட்டோம் எனவும் உறுதியளித்துள்ளார். (இ-7)

# வசாவிளானின் ஒருபகுதி இராணுவத்திடமிருந்து 30 ஆம் திகதி விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் வடமூலை உத்தரிய மாதாகோவிலும் அதன் அருகிலுள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையும் , சுமார் 29 ஏக்கர் காணியையும் நாளை மறுதினம்30 ஆம்திகதி காலை 9 மணிக்கு உத்தரிய மாதா கோவிலில் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் கெட்டியாராட்சியால் யாழ்.அரச அதிபரிடம் கையளிக்கப்படும்.

இந்த நிகழ்வின் பின்னர் அங்கு நன்றி வழிபாடும் நடைபெறும்.இதில் வசாவிளான் பகுதியைச் சேர்ந்தவர்களும் அச்சுவேலி கோவில் பங்கைச்சேர்ந்த சூசையப்பர் கோவில் மக்கள், அந்தோனியார் கோவில் மக்கள், திரேசம்மாள் கோவில் மக்கள், நவக்கிரி மக்கள், ஒட்டகப்புலம் புனித மரியாள் தேவாலயம், பலாலி ரிகலட்டியாகப்பர் தேவாலயம், தோலகட்டி மக்கள் மற்றும் வசாவிளானைச் சேர்ந்த இந்துமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.(இ)

# ராஜபக்ஷக்களை காப்பாற்றும் தேவை ஐ.தே.க.விற்கு இல்லை

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் ராஜபக்ஷக்களின் குற்றங்களை மூடிமறைக்க வேண்டிய தேவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒருபோதுமில்லை. ராஜபக்ஷக்கள் குறித்த வழக்குகளை முன்னெடுக்கும் போது ஒருசிலர் தடுப்பதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். பிணைமுறி விவகாரத்தில் அக்கறை காட்டும் நபர்கள் ஏன் தாஜுடீன் விவகாரத்தில் உண்மைகளை மூடிமறைக்கின்றனர் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

மாத்தறை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் சட்டம் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு பொருந்தாதா? அவர்கள் விடயத்தில் சட்டம் செயற்படாதா? என்ற சந்தேகம் எனக்குள் எழுகின்றது. ஏனெனில் அவர்கள் தொடர்புபட்ட முக்கியமான வழக்குகள் அனைத்தும் விசாரணைக்காக முன்னெடுக்கப்பட்டாலும் எங்காவது ஒரு இடத்தில் அவை தடைப்படுகின்றது. அரசியல் காரணிகளுக்காக அவர்களை பாதுகாக்கும் சிலர் அவ்வாறு செய்வதனால் மக்கள் எம்மையும், பொலிஸ் திணைக்களத்தையும் திட்டித் தீர்க்கின்றனர். எவ்வாறு இருப்பினும் இந்த அரசாங்கத்தில் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தை காப்பாற்றவோ, கொலைகாரர்களை, கொள்ளைக்காரர்களை பாதுகாக்கவோ அவர்கள் தொடர்பிலான குற்றங்களை மூடிமறைக்கவோ ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்தவித தேவையும் இல்லை.

மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் காட்டிய அக்கறையில் பத்து வீதத்தையேனும் ராஜபக்ஷக்களின் குற்றங்களை கண்டறிய முன்வரவில்லை என்பதே உண்மையாகும். அவர்களின் குற்றங்களையும் அவ்வாறே விசாரித்திருந்தால் அவர்கள் செய்த மிகப்பெரிய ஊழல், மோசடிகள், கொலை என்பனவும் கண்டறியப் பட்டிருக்கவும் முடிந்திருக்கும். மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் எமது அரசாங்கத்தின் அமைச்சர்கள் யார் யாருக்கோ தொலைபேசி அழைப்புகளை எடுத்ததாகவும் கூறி வருகின்றனர். எமது அரசாங்கத்தின் மீது பழி சுமத்தவும் ,சம்பவங்களை திசைதிருப்பவும் இவ்வாறான கருத்துக்களை கூறி வருகின்றனர். இந்த விவகாரத்தில் அக்கறையுடன் செயற்படும் நபர்களுக்கு ஏன் தாஜுடீன் கொலை சம்பவத்தில் அன்றைய இரவு எத்தனை தொலைபேசி அழைப்புகள் பதிவாகியுள்ளன என்பது குறித்தும் ,யார் யார் தொடர்புபட்டுள்ளனர் என்பது குறித்தும் நாட்டு மக்கள் மத்தியில் தெரிவிக்கவில்லை. உண்மைகளை சிலர் மறைத்து விட்டனர்.

யார் எதற்காக இவ்வாறு செய்கின்றனர் என்று தெரியவில்லை. நல்லாட்சி காலத்திலும் முன்னைய குற்றவாளிகளின் ஆவிகள் நிறுவனங்களில் இருந்து இவற்றை மறைத்து வருகின்றதோ தெரியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்கும்வேலைத் திட்டங்களில் மாத்திரம் இவ்வாறு தடைகள் ஏற்பட்டு வருகின்றன. இதையும் அனைவரும் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாரம்பரிய பொருட்களின் கண்காட்சி



(கொழும்பு)

மலையகத்தின் பாரம்பரிய பொருட்களின் கண்காட்சி நேற்று கொட்டகலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் கலாமன்றம் ஏற்பாடு செய்துள்ள "மலையக வரலாறும் வாழ்வியலும்" என்ற தொனிப்பொருளினான கண்காட்சி, கல்லூரி வளாகத்தில் ஆரம்பமாகியது.




கல்வி அமைச்சின் தமிழ் பாடசாலைகளுக்கான அபிவிருத்தி குழுவின் பணிப்பாளர் சு.முரளிதரன் இக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். (இ-7)

# விமானத் தாக்குதலில் 53 பேர் பலி!

(டமாஸ்கஸ்)

சிரியாவின் அல் அல் ஷஃப (Al-Shafah) பகுதியில் ரஷ்ய விமானப் படையினர் நடத்திய தாக்குதலில்; 53 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, பலர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



விமானத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் 23 சிறுவர்களும் அடங்குவ தாக. லண்டனைத் தளமாகக் கொண்ட சிரிய கண் காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியிலுள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளின் இடங்களை இலக்குவைத்து ரஷ்ய விமானப்படையினர் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியபோதே 53 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் மீட்புப்பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாமென வும், கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நிலை கொண்டுள்ள இடங்களை மீட்பதற்கான நடவடிக்கையில் ரஷ்யாவின் உதவியுடன் சிரிய அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாகிஸ்தானில் 3ம் நாளாகவும் முற்றுகைப் போராட்டம்



(இஸ்லாமாபாத்) பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நேற்று மூன்றாவது நாளாக இஸ்லாமியவாதிகள் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர் வாகனங்களை எரித்தனர். போராட்டத்தை அடக்க இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் தேர்தல் சீர்திருத்த சட்டம் 2017இல் மதத்தின் பெயரில் பதவிப் பிரமாணம் எடுப்பதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக சட்ட அமைச்சர் ஜகித் ஹமீத்தை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி கடந்த 3 வாரங்களாக தெஹ்ரீக்-இ-காத்தம், தெஹ்ரீக்-இ-லாபாய்க் மற்றும் சன்னி தெஹ்ரீக் பாகிஸ்தான் உள்ளிட்ட இஸ்லாமிய அமைப்புகள் தலைநகர் இஸ்லாமாபாத்தில் முக்கிய வீதிகளை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகின்றன.

பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து, கடந்த 25ஆம் திகதி போராட்டக்காரர்களை கலைக்க பாதுகாப்புப் படைகள் முயன்றபோது பயங்கர கலவரம் வெடித்தது. இதில், 6 பேர் கொல்லப்பட்டனர். 95 பாதுகாப்புப் படையினர், பொலிஸார் உட்பட 200 பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினமும் நேற்றும் முற்றுகைப் போராட்டம் தொடர்ந்தது. இதனால், அப்பகுதிகளில் இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிப்புக்குள்ளானது.

இந்நிலையில், சட்ட அமைச்சர் பதவி விலகும் வரையில் தங்கள் போராட்டம் கடைசி வரை நீடிக்கும் என்று தெஹ்ரீக்-இ-லாபாய்க் இயக்கத்தின் செய்தி தொடர்பாளர் எஜாஸ் அஷ்ரபி தெரிவித்தார். இந்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர். போராட்ட செய்திகளை ஒளிபரப்புவதை தடுக்க, தொலைக்காட்சி அலைவரிசைகள் நேற்று 3வது நாளாக முடக்கப்பட்டன. (இ-7)

# நான் தான் ஜெயலலிதாவின் மகள்! உரிமை கோரி பெங்களூர் பெண் அம்ருதா உச்ச நீதிமன்றில் வழக்கு

(டில்லி)

ஜெயலலிதாவின் மகள் என உரிமை கோரி பெங்களூரைச் சேர்ந்த அம்ருதா என்ற பெண் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாரிசுகள் என அவரது அண்ணன் மகள் ஜெ தீபா மற்றும் தீபக் ஆகியோர் உரிமை கொண்டாடி வருகின்றனர். இதேபோல் கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்த மஞ்சுளா என்கிற அம்ருதாவும் (வயது 38) ஜெயலலிதாவின் மகள் என உரிமை கோரியுள்ளார்.

ஜெயலலிதா தன் சொந்த தாய் எனக் கூறி பரபரப்பை ஏற்படுத்திய அம்ருதா, இதுகுறித்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்நிலையில், ஜெயலிதாவின் மகள் என உரிமை கோரி அம்ருதா உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அதில், ஜெயலலிதாவின் மகள் என தன்னை அறிவிக்க வேண்டும் என்றும், அவர் என் தாய்தான் என்பதை நிரூபிக்க டிஎன்ஏ பரிசோதனை செய்ய உத்தரவிட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.






'1980 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி ஜெயலலிதாவின் மகளாக நான் பிறந்தேன். என் வளர்ப்பு தாய் சைலஜா 2015 இல் இறந்துவிட்டார். வளர்ப்பு தந்தை சாரதி இந்த ஆண்டு மார்ச் 20 ஆம் திகதி இறந்துவிட்டார். ஜெயலலிதாவுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் என்பதால் இந்த உண்மை வெளிப்படுத்தப்படவில்லை. எனவே, ஜெயலலிதாதான் என் தாய் என்பதை நிரூபிக்க, மெரினாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ள அவரது உடலை தோண்டி எடுத்து டிஎன்ஏ பரிசோதனை நடத்த உத்தரவிட வேண்டும். வைஷ்ணவ ஐயங்கார் பிராமண முறைப்படி ஜெயலலிதாவுக்கு இறுதிச்சடங்கு நடத்தப்பட வேண்டும்' எனவும் கோரியுள்ளார். (இ-7)

# காஷ்மீரை மறந்து விடுங்கள்

## முன்னாள் முதல்வர் பேச்சால் சர்ச்சை

(ஸ்ரீநகர்)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை மறந்து விடுங்கள் எனவும், முதலில் ஸ்ரீநகரில் மூவர்ண கொடியை ஏற்றுங்கள் என்று ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் பரூக் அப்துல்லா பேசியிருப்பது மீண்டும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.



ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சரும் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவருமான பரூக் அப்துல்லா நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பேசும் போது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் சாகச செயலில் ஈடுபடும் முன் இந்திய அரசாங்கம், ஸ்ரீநகரில் உள்ள லால்சவக் பகுதியில் தேசிய கொடியை ஏற்ற முயற்சிக்க வேண்டும். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தேசிய கொடியை ஏற்ற வேண்டும் என்று மத்திய அரசில் உள்ளவர்கள் பேசி வருகின்றனர். அவர்களுக்கு நான் ஒன்றை சொல்கிறேன். ஸ்ரீநகரின் லால்சவக்கில் முதலில் மூவர்ண கொடியை ஏற்றுங்கள். இதை இங்கே (காஷ்மீர்) செய்யக் கூட, அவர்களால் முடியவில்லை. ஆனால் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை பற்றி பேசி வருகின்றனர்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பற்றி பரூக் அப்துல்லா பேசி வரும் கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது. இந்த மாத முற்பகுதியில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பாகிஸ்தானுக்கே சொந்தம் என்று பேசியிருந்தது பெரும் பரபரப்பை கிளப்பியிருந்தது. பரூக் அப்துல்லா இவ்வாறு சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவிப்பது வாடிக்கையான ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்து தரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்த மத்திய அரசு தினேஷ்வர் ஷர்மா என்பவரை நியமித்தது.

அப்போது, பரூக் அப்துல்லா, தினேஷ்வர் ஷர்மா காஷ்மீர் விவகாரம் குறித்து பாகிஸ்தானுடனும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று கூறியது பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. (இ-7)

# இரட்டை இலையை தனித்தனி இலையாக ஆக்கிவிடக்கூடாது

## தமிழிசை ஆதங்கம்



(சென்னை)

அ.தி.மு.க.வில் உட்கட்சி பிரச்சினையால் இரட்டை இலையை தனித்தனி இலையாக ஆக்கி விடக்கூடாது என்று தமிழக பா.ஜனதா மாநில தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்தார்.

அ.தி.மு.கவில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் இடையே அதிருப்தி நிலவி வருகிறது.

இதுகுறித்து தமிழக பா.ஜனதா மாநில தலைவர் தமிழிசை கூறுகையில்,

5 வருடமும் அ.தி.மு.க. ஆட்சி நடத்த வேண்டும் என்றுதான் மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் 5 வருடம் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதுதான் விருப்பம்.

ஆனால் கட்சியில் ஏற்படும் குழப்பம் ஆட்சியில் பிரதிபலிக்கும். ஆட்சியில் குழப்பம் இருக்கக்கூடாது என்பதற்காக நாங்கள் கருத்து தெரிவித்தோம்.

அ.தி.மு.கவில் உட்கட்சி பிரச்சினை இருந்தாலும் மக்களுக்கு நல்லது நடக்காது என்று நினைக்க தோன்றுகிறது. இரட்டை இலையை மீண்டும் பெற்று இருக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து அவர்களுக்குள் பிரச்சினை ஏற்படுவதாக தகவல் வெளியாகி உள்ளது. உட்கட்சி பிரச்சினையால் இரட்டை இலையை தனித்தனி இலையாக ஆக்கி விடக்கூடாது.


திரை உலகத்துறையினர் மட்டும் மாற்றத்தை தனிப்பட்ட முறையில் கொண்டுவர முடியாது.

மாற்றத்தை கொண்டு வர விரும்புகிறவர்கள் பா.ஜனதாவுடன் இணைந்து மாற்றத்தை கொண்டு வரலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

கட்சி வேட்பாளர்களும் கட்டுப்பணம் செலுத்த வேண்டும்

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புதிய முறை அறிமுகமாகின்றது

## மேலதிக தேர்தல் ஆணையர் தகவல்




(கொழும்பு)

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முதலாக இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில், கட்சிகளில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்களும் கட்டுப்பணம் கட்டுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளதாக, மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

அகில இலங்கை வை.எம்.எம். ஏ. பேரவை மற்றும் யன்ங் ப்ரெண்ட்ஸ் அமைப்பு உட்பட சில அமைப்புகள் இணைந்து நடத்திய, புதிய தேர்தல் முறை தொடர்பில் மக்களை அறிவுறுத்தும் நிகழ்வு, கண்டி- மஹியாவையில் அமைந்துள்ள கிரான்ட் வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உள்ளூராட்சி மன்றங்களுக்கான இப்புதிய தேர்தல் முறை, கடந்த அரசாங்கத்தில் கொண்டுவரப்பட்ட போதும், அதனை தற்போதைய ஜனாதிபதியே வர்த்தமானியில் வெளியிட்டார். அதில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால், அதனை திருத்துவதற்கு அசோக பீரிஸின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழு 203 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பாக திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு அதுவும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

"இந்நிலையில் தேர்தலை நடத்த இருந்தபோதும், திருத்தம் செய்யப்பட்ட 203 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பாக நீதிமன்றில் ஓர் இடைக்கால தடை உத்தரவு இருக்கின்றது. இடைக்கால தடைக்கு உள்வாங்காத 133 உள்ளூராட்சி மன்றங்களில் சிறு சிறு அச்சுப்பிழைகள் காணப்படுகின்ற 40 உள்ளூராட்சி மன்றங்களையும் தவிர்த்து 93 சபைகளுக்கு தேர்தலை நடத்த வேட்பு மனுக்கள் கோரப்படவுள்ளன. இந்நிலையில், இத்தேர்தல் முறை தொடர்பில் ஒரு விளக்கத்தை மக்கள் பெற்றுக் கொள்வது மிக முக்கியமாகும்.

"இதற்கு முன் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது, ஒரு போதும் கட்சிகளில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்த வேண்டியதாக இருக்கவில்லை. ஆனால், இம்முறை முதல் முதலாக, கட்சிகள் ஊடாக போட்டியிடும் வேட்பாளர்களும் கட்டுப்பணம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய, சுயாதீன குழு என்றால் ஒருவருக்கு 5,000 ரூபாய் வீதமும், கட்சி ரீதியில் என்றால் ஒருவருக்கு 1,500 ரூபாய் வீதமும் கட்டுப் பணம் செலுத்தப்பட வேண்டும்.

"அதேபோன்று, வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும் சில சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. முழு வேட்பு மனுவும் ஆறு சந்தர்ப்பங்களிலும், ஒன்று அல்லது இரண்டு வேட்பாளர்களுடைய பெயர் அகற்றப்படும். மூன்று சந்தர்ப்பங்களும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

"முழுமையான வேட்பாளர்களின் எண்ணிக்கையை உள்ளடக்காத வேட்பு மனு, நிர்ணயிக்கப்பட்ட பெண் வேட்பாளர்களை உள்ளடக்காத வேட்பு மனு, கட்டுப் பணம் செலுத்தாத வேட்பு மனு, கட்சியின் செயலாளர் அல்லது சுயாதீன குழுவின் தலைவர் கைச்சாத்திடாத வேட்பு மனு, கட்சியின் செயலாளர், சுயாதீன குழுவின் தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்டவர் அல்லாது வேறு ஒருவர் சமர்ப்பிக்கும் வேட்பு மனு ஆகியன முற்றாக நிராகரிக்கப்படும்.

"எவரேனும் ஒரு வேட்பாளர் கைச்சாத்திடாவிட்டால் அவரது பெயர் நீக்கப்படும். அதேபோன்று, அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாடு பிரிவதற்கு எவ்வித உதவியும் செய்வதில்லை என்ற சத்திய கடிதம் இல்லாமல் இருந்தால், அவருடைய பெயரும் பட்டியலில் இருந்து நீக்கப்படும். மேலும், இளம் வேட்பாளர் என குறிப்பிட்ட பின் அவரது வயதை உறுதி செய்யாவிட்டாலும் அவரது பெயர் நீக்கப்படும்.

"இம்முறை வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும்போது அவதானமாக நடந்து கொள்வது, தமது வேட்பு மனுக்களை பாதுகாத்துக் கொள்ள கூடியதாக அமையும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# 2 மாதங்களுக்குள் தேர்தலை நடத்த முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் எவ்வாறேனும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பதாக, பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிற்போடப்படுவதால் மக்களின் ஜனநாயக உரிமை மீறப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாணந்துறை - வாழைத் தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# திருகோணமலையில் கடும் மழை வெள்ளக் காடான வயல்கள்



(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் நீண்ட காலத்திற்கு பின் ஏற்பட்ட கடும் மழை காரணமாக, தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இம் மாவட்டத்தின் கந்தளாய், முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம் மற்றும் திருகோணமலை போன்ற பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக வடிகான்களில் நீர் வழிந்தோடுவதோடு, வீதிகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

அத்துடன், கந்தளாய், வென்ராசன், பனிச்சம்குளம் மற்றும் வான்எல போன்ற குளங்களின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளது.

கந்தளாய் மற்றும் முள்ளிப்பொத்தானை போன்ற கிராமப்புற பகுதிகளில் உள்ள வயல் நிலங்களும் மழை நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நம் அகராதியிலிருந்து நீக்கப்பட வேண்டிய சொற்கள்!

பக்குவப்படுத்தாத வார்த்தைகளை எதிரே இருப் பவர்களுக்கு வழங்கி அவர்களுக்கு மன அஜீரணங்களை உண்டாக்கும் செயல் கைவிடப்பட வேண்டிய ஒன்று!

ஒரு டிரைவர் புதிதாக வேலைக்குச் சேர்ந்தார். முதலாளி பின்னால் அமர, கார் புறப்பட்டு அலு வலகத்திற்குப் போனது. கியர் கர்கர் என்றது. வழியில் ஒரு கட்டை வண்டிச் சக்கரத்தின் மீது கார் லேசாக உராய்ந்தது. ஒரு சைக்கிள்காரர் கார் டிரைவரைத் திட்டிக்கொண்டே போனார்.

இவ்வளவு நடந்தபிறகும் கார் முதலாளி ஒன்றும் சொல்லவில்லை. மாலையில் வீடு திரும்பி, காரின் சாவியை டிரைவர் தந்தபோது என்னப்பா! இன்னைக்கு நல்லபடியா ஓட்டின திருப்தி உனக்கு இருந்ததா?

டிரைவருக்கு இனிய அதிர்ச்சி. இல்லை... வந்து... என்று இழுக்க உனக்கே திருப்தியில்லை. எனக்கு எப்படி வரும் ? உனக்கு வேறு நல்ல இடமாப் பார்க்கட்டுமா?

டிரைவர் அசந்துபோனார். உனக்கு வேலை கிடையாது; நீ ஓட்டும் விதம் சரியில்லை என்பதை இதைவிட நாசூக்காக எடுத்துச் சொல்ல முடியுமா? டிரைவர் யோசித்தார்.

சரி உங்க இஷ்டப்படி செய்யுங்க, என்றார்.

வார்த்தையில் கடுமையில்லை. என்னையா கார் ஓட்டுறே நீ? எவன்யா லைசன்ஸ் குடுத்தான் உன க்கு? என் இரண்டரை இலட்ச ரூபாய்க் காரையும் என் உயிரையும் உன்கிட்டக் குடுத்துட்டு உட்கார்ந் திருக்க எனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?

என்றெல்லாம் அநாவசியமான கூச்சல் - ஓவரான பேச்சு எதுவுமே இல்லை.

அது ஒரு சுமுகமான பிரிவு.

நாளை எங்காவது பார்த்துக்கொண்டால் கூட என்னப்பா எங்கே வேலை செய்றே? சௌக்கியமா? என்று ஒன்றிரண்டு கேள்விகளைப் புன்னகையுடன் கேட்கிற மாதிரியான இனிமை மிகுந்த வெட்டல்.

கன்னாபின்னாவென்று தாக்கி எழுதும் பத்திரி கைகளைப் பொருட்படுத்தாத பலர், நாகரிகமான பத்திரிகைகளில் வரும் மிக நளினமான விமர்ச னங்களுக்குப் பயந்து தங்களை மாற்றிக் கொண் டிருக்கிறார்கள்.

அவனே இவனே! என்கிற திட்டல்களை விடத் தரமான சொற்களால் பேசுவதுதான் ஒரு மனிதனின் மனதை ஒரே நிமிடத்தில் மாற்ற வல்லது.

நம் வருத்தம், ஆதங்கம், எரிச்சல் எதிர்பார்ப்பு அனைத்தையுமே அழகான சொற்களாலேயே விளக்கிவிடலாம். மட்டமான வார்த்தைகளை பயன்படுத்தினால்தான் எதிராளிக்கு உரைக்கும் என்று எண்ணுவதும் நம்புவதும் தவறு.

அழகான தொனியில் சொல்வதன் மூலம் நாம் நம்மை மட்டுமல்ல எதிராளியையும் நாம் நாகரிகமானவனாக்குகின்றோம்.

ஒரு மனிதனுக்கு மதிப்பெண் போட வேண்டுமானால் அதற்கு உதவுபவை இரண்டு. முதலாவது அவனது செயல்கள். இரண்டாவது அவன் பயன்படுத்தும் சொற்கள். மெல்ல மெல்ல அநாகரிக சொற்களை நம் வாழ்க்கை அகராதியில் இருந்து நீக்கி அதைப் புனித நூலாக ஆக்கிக் கொள்வது நம்மை உயர்த்தவல்ல தலையாய செயல்.

**லேனா தமிழ்வாணன்**

# சுதந்திரத்தை சரியான முறையில் இளைஞர்கள் பயன்படுத்தவில்லை

## வியாழேந்திரன் எம்.பி. விசனம்



(ஏறாவூர்)

யுத்தத்தின் பின்பு கிடைத்த சுதந்திரத்தை வடக்கு-கிழக்கிலுள்ள இளைஞர்கள் சரியான முறையில் பயன்படுத்த தவறியமையே சீரழிவுகளுக்கு காரணம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு குட் சேர்பட் சர்வதேச பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் குட் சேர்பட் சர்வதேச பாடசாலையின் அதிபர் திருமதி ஜோன் என் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் கலந்து கொண்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர், "மூன்று தசாப்த காலங்களாக எமது மண்ணில் யுத்தம் நடந்தபோது எமது தமிழ் மக்களின் கல்வி மிக உயர் நிலையில் இருந்தது. 2009 ஆம் ஆண்டு மேமாதம் 18ஆம் திகதி யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் வடக்கு-கிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்களின் கல்வி நிலை தலைகீழாக மாறியிருக்கின்றது.

இறுதியாக வெளியாகிய கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் முடிவுகளின் பிரகாரம் இலங்கையில் இருக்கின்ற ஒன்பது மாகாணங்களில் கடைசி மாகாணமாக வடமாகாணம் இருக்கின்றது. அத்துடன், கடைசிக்கு முதல் மாகாணமாக கிழக்கு மாகாணம் இருக்கின்றது. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகளின் பிரகாரம் கடைசி மாகாணமாக கிழக்கு மாகாணம் இருக்கின்றது.

கடைசிக்கு முதல் மாகாணமாக வடமாகாணம் இருக்கின்றது. யுத்தத்தின் பின்பு வடக்கு-கிழக்கு மாகாணங்களின் கல்வி நிலை மிக மோசமடைந்திருக்கின்றது. அதற்கு காரணம் யுத்தத்தின் பின்பு கிடைத்த சுதந்திரத்தை எங்களுடைய இளைஞர்கள் சரியான முறையில் பயன்படுத்த தவறியமையாகும்.

வடமாகாணத்தில் வாள் வெட்டுகளும் ஆவா குழுக்களும் என்ற நிலையில் தங்களுடைய வாழ்நாளை கழிக்கின்ற பல இளைஞர்களை நாங்கள் பார்க்கின்றோம். இங்கு கூட இலத்திரனியல் ஊடகங்கள், முகநூல் பாவனைகளில் அதிகளவில் ஈடுபட்டு போதைப் பொருட்களுக்கு அடிமையாகி தங்களுடைய வாழ்நாளை அத்தகைய விடயங்களில் ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்ற நிலைமை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருக்கின்றது. இந்த நிலைமை எங்களை முழுமையாக பாதித்திருக்கின்றது.

ஒரு காலகட்டத்தில் நாங்கள் எங்களுடைய கல்வி நிலையால் முழு இலங்கையையும் ஆண்டோம். அனைத்து பரீட்சைகளிலும் சித்தியடைந்து அனைத்து துறைகளிலும் உயர் நிலையில் இருந்தோம். ஆனால் இன்று அந்த நிலைமை தலைகீழாக மாறியிருக்கின்றது. நாங்கள் கல்வியால் வளர்ந்த சமூகமாவோம். கல்வியால் அடையாளப்படுத்தப்பட்ட சமூகமாவோம். நாம் மீண்டும் அந்த நிலைக்கு வரவேண்டும்.

நாங்கள் எங்களுக்கான நிரந்தரத் தீர்வொன்றை பெற வேண்டுமானால் இரண்டு விடயங்களில் நாங்கள் முன்னேற வேண்டும். இல்லாவிட்டால் தீர்வு அசாத்தியமாகும். பொருளாதாரம் மற்றும் கல்வியில் எமது சமூகத்தை நாங்கள் எந்தளவிற்கு உயர் நிலைக்கு வளர்த்தெடுக்கின்றோமோ அந்த நிலையில் தான் இந்த நாட்டில் நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரபாவுடன் பிரதமர் ஒப்பந்தம் செய்யலாம் நாம் ஏன் பிறந்தநாள் கொண்டாட முடியாது

## சிவாஜிலிங்கம் கேள்வி

(கரணவாய்)

சர்வதேசத் தலைவர்கள் மாத்திரமல்ல சிங்களத் தலைவர்களும் பிரபாகரனுடைய ஆளுமையை ஏற்கக்கூடிய வகையிலே தமிழனுக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதை ஐ.நா.வரை கொண்டு சென்ற ஒரு தலைவனின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றோம் என வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தலைவர் பிரபாகரனில் இல்லத்தில் அவரின் 63ஆவது பிறந்த தினத்தில் கேக் வெட்டி கொண்டாடிய பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாம் இப் பிறந்த தினத்தை கொண்டாடுவது சிங்கள தேசத்தில் ஓர் சர்ச்சையை ஏற்படுத்தும் எனத் தெரிந்து கொண்டு தான் இதைச் செய்கிறோம்.

ஜே.வி.பி. தலைவரின் பிறந்த தினத்தை கார்த்திகை வீரர் தினம் எனக் கொண்டாட முடியும் எனில் எமது விடுதலைக்காக அஹிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடியவர்களின் பிறந்த தினத்தையும் நினைவு தினத்தையும் கொண்டாட முடியும்.

2009 மே 18 விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனித்ததாக கூறிய பின் பிறந்த தினத்தையோ நினைவு தினத்தையோ செய்வது சட்டவிரோதமல்ல.

பிரபாகரனுடன் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒப்பந்தம் செய்ய முடியும் எனில் ஏன் நாங்கள் நினைவு தினத்தை அனுஷ்டிக்க முடியாது? அவரின் வீரத்தை சிங்களத் தலைவர்களே விபரிக்கையில் நாம் அவற்றை விபரிக்க வேண்டிய அவசியமில்லை.

தேசியம், சுயநிர்ணயம், தன்னாட்சி என்கின்ற அடிப்படையில் தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆழுகின்ற தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித் தார். (இ-60)

# கலைஞர்களுக்கு உதவும் ஓய்வூதியக் கொடுப்பனவு

(கொழும்பு)

கலைஞர்களுக்கு உதவும் ஓய்வூதியக் கொடுப்பனவு முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

இதற்காக வரவு- செலவுத் திட்டத்தில் 2016 ஆம் ஆண்டில் 44 இலட்சம் ரூபாவும். 2017 ஆம் ஆண்டில் ஆயிரத்து 50 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 31 கலைஞர்கள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

கலைஞர்களின் பங்களிப்புடனான இந்தக் கொடுப்பனவை பெற விரும்பும் கலைஞர்கள் இதற்கென விண்ணப்பிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜோன் டி சில்வா கலையரங்கத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. இதன் முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன். இரண்டாம் கட்டப் பணிகளுக்காக 13 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நாவின்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.கட்சியின் இலக்கை நோக்கிய பயணம் நாவலப்பிட்டியில் ஆரம்பம்



(கொழும்பு)

மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகள் உள்ளடங்கிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை இலக்கு வைத்து, கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

"அரச ஆட்சியில் காணும் மாற்றம்", "பலம்மிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்", "புதிய தேர்தல் முறைமை" ஆகிய பிரதான மூன்று கருப்பொருளில், இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

முதலாவது கூட்டம், நாவலப்பிட்டி கிரான்ட் மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. அதன் தொடர்ச்சியாக, மற்றுமொரு கூட்டம், கொலன்னாவை மங்களபாய மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

அந்தக் கூட்டங்களுடன், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை இலக்காகக் கொண்டு. கட்சியின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கும் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

முதலாவது கூட்டத்தில். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உரையுடன், நாடளாவிய ரீதியில் உள்ள சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 26 கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில், நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் வழிகாட்டலில், கட்சியின் தொழில்நுட்பப் படையணியால், இந்தக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன" என்று அப்படையணியின் பணிப்பாளர் நாயகம் சுதத் சந்திரசேகர தெரிவித்தார்.

இதேவேளை, இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான பிரசார நடவடிக்கை, எதிர்வரும் வாரம் ஆரம்பிக்கப்படுமென, அக்கட்சி அறிவித்துள்ளது. (இ-7)



பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரனின் பணிநயப்பு விழா மற்றும் வரகிணி மலர் வெளியீட்டு விழா என்பன இணுவில் மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற போது...

(படங்கள்:-சக்தி)

# உலகத் தமிழர்களாக ஒன்றுபட்டு மாவீரர் இலட்சியத்தை நனவாக்க அனைவரும் அயராது உழைப்போம்!

## நாடு கடந்த தமிழீழ அரசின் மாவீரர்நாள் அறிக்கை

நமது தேசத்தினதும் மக்களதும் விடுதலைக்காய் களமாடி விதையாய் வீழ்ந்த எமது மண்ணின் வீர வித்துக் களை நினைந்துருகி, அனைத்துலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் வீரவணக்கம் செலுத்தும் நாள்.

ஈகத்தின் இலக்கணமாக உலகப் பரப்பெங்கும் தம்மை அடையாளப்படுத்தியதன் மூலம் உலகமெங்கும் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் புதிய நம்பிக்கைகளை அவர்கள் மனதில் விதைத்த தமிழீழத் தேச வீரர்களின் பெருநாள். மாவீரர்கள் எமது தேசத்தின் பாதுகாப்புக் கவசமாக இருந்தார்கள். மக்களதும் மண்ணினதும் விடுதலை வேட்கையின் குறியீடுகளாக விளங்கினார்கள்.

தாம் படைக்க எண்ணிய புதிய சமுதாயத்தின் முன்னோடிகளாக வாழ்ந்து காட்டி, ஏற்றத்தாழ்வுகளற்ற, சமூக நீதி நிலவும் சமுதாயமொன்றைத் தமிழர் தாயகப்பகுதியில் கட்டியெழுப்பும் தேசச் சிற்பிகளாகச் செயற்பட்டார்கள்.

மாவீரர்நாளும், மாவீரர் துயிலும் இல்லங்களும் சமத்துவத்தின் குறியீடாக விளங்குகின்றன. தாயக தேசத்தின் விடுதலைக்காய் உயிர் ஈகம் செய்த அனைத்து மாவீரர்களையும் சமமாக மதித்து அவர்களை எமது மக்கள் தத்தமது இதயக்கோவிலில் வைத்து வணங்கும் நாளாக மாவீரர் நாள் இருக்கிறது.

மூத்த போராளியென்றோ, புதிய போராளியென்றோ, ஆண், பெண்என்றோ, வயதில் மூத்தவர் இளையவரென்றோ வேறுபாடுகள் எதுவுமின்றி, சமூகத்தில் நிலவும் படிநிலை ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து, தேசத்தின் விடுதலைக்காய் வீழ்ந்த அனைத்து புதல்வர்களையும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாய் நமது தேசம் போற்றும் நாளாக மாவீரர் நாள் இருக்கிறது. மாவீரர் நாளில் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களோடு இணைந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் எமது மாவீரர் களுக்கு வீரவணக்கம் செலுத்திக் கொள்கிறது.

மாவீரர்கள் தமிழீழ மக்களுக்கென சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசு தமிழர் தாயகப் பிரதேசங்களில் அமைக்கப்படுவதனைத் தமது அரசியல் இலக்காகக் கொண்டே தம் இன்னுயிர்களை ஈகம் செய்தார்கள்.

தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும் சிங்களத்தின் இனவழிப்புக்கு உட்படாமல் வாழ்வதற்கு ஏற்றதோர் அரசியல் ஏற்பாடாகத் தமிழீழத் தனியரசு அமைதல் ஒன்று மட்டுமே இருக்க முடியும் என்பதனை வரலாற்றுப் பட்டறிவின் மூலம் உணர்ந்தவர்களாகவே அவர்கள் களமாடினார்கள்.



நமது மாவீரர்கள் தேசிய வீரர்களாகவே இருந்தார்கள். தேசிய வெறியர்களாக அவர்கள் என்றும் இருந்ததில்லை. எமது மக்களின் விடுதலைக்காய் எமது தாயகப் பிரதேசங்களை மீட்டெடுப்பதற்காகவே அவர்கள் போராடினார்கள். ஏனைய தேசங்களை ஆக்கிரமிப்பதற்காக அவர்கள் என்றும் போராடியதில்லை. எமது மக்களை இன அழிப்பில் இருந்து பாதுகாக்கவே அவர்கள் போராடினார்கள். இன வழிப்புக்கு எதிரான போராட்டம் என்ற வகையில்மாவீரர்களின் போராட்டம் மிக முற்போக்கானது. உலக மக்களது விடுதலைக்கும் வழிகாட்டக் கூடியது.

மாவீரர்களின் நீண்ட போராட்டம் காரணமாக எமது தேசம் தனது சிறப்பை உணர்ந்து ஒரு வலுவுள்ள தேசமாக அணிதிரளத் தொடங்கியது. ஒரு சிறிய தேசமாக இருந்தபோதும் உலகப்பரப்பெங்கும் தன்னை நோக்கிய கவனத்தை ஈர்த்துக் கொண்ட தேசமாக ஈழத்திருநாடு விளங்குவதற்கு மாவீரர்கள் காரணமாக இருந்தார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டம் அனைத்துலகக் கவனத்தை ஈர்ப்பதற்கும் மாவீரர்களின் போராட்டமே வழிகோலியது. தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை அனைத்துலக சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கும் மாவீரர்களின் ஈகம் நிறைந்த போராட்டமே காரணமாய் அமைந்தது.

1950களில் சிங்களம் ஆரம்பித்த தமிழின அழிப்புத் திட்டத்தை மாவீரர்களின் போராட்டம் நெருக்கடிக்குள்ளாக்கியிருந்தது. மாவீரர்களின் போராட்டம் முகிழ்த்தெழுந்திருக்காவிடின் சிங்களம் தனது தமிழினவழிப்புத் திட்டத்தில் இற்றைக்குக் கணிசமான தூரம் முன்னேறியிருக்கும். 2009 ஆம் ஆண்டின் மே மாதத்தின் பின்னர் திட்டமிட்ட வகையில் சிங்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இன வழிப்புத் திட்டம் இதனை உய்த்துணர வைக்கிறது.

மாவீரர்களின் கனவை நனவாக்கும் இலக்குடனேயே நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது கொள்கையினை வகுத்துக் கொண்டது. 2010 ஆம் ஆண்டில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை நாம் உருவாக்கிய போது மாவீரர்களை மனதில் இருத்தியே அதனை உருவாக்கிக் கொண்டோம். அன்றிலிருந்து இன்று வரை சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசை அமைப்பதற்கான செயற்பாடுகளை அனைத்துலக அரங்கில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. ஜனநாயகவழியில், அரசியல், இராஜதந்திர ரீதியிலான போராட்ட முன்னெடுப்புகளை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தனித்துவமான அணுகுமுறையாக உள்ளது.

அரசியல் இராஜதந்திர வழிமுறைகளென்பவை ஒன்றுடனொன்று தொடர்புபட்டவை. அரசியற் செயற்பாடுகளின் ஊடாக நாம் திரட்டிக்கொள்ளும் வலு நமக்கு இராஜதந்திரவழிமுறைக்குக் கூடுதல் வாய்ப்பைத் திரட்டித் தரும். நமது வலு அதிகரிக்க அதிகரிக்க நாம் அனைத்துலக வலுச்சமன்பாட்டுக் கணக்கில் கணிப்பிடப்பட வேண்டியவர்களாக மாறுவோம்.

ஆயுதம்தாங்கியபோராட்டம் நடைபெற்று, தமிழீழ நடைமுறையரசு அமைக்கப்பட்டிருந்த காலத்தில் தமிழ் மக்களிடம் இருந்த வலு தற்போது எம்மிடம் இல்லாதுவிடினும் மென்வலு அடிப்படையிலான வலிமையினைத் திரட்டிக் கொள்ளக்கூடிய வியூக முக்கியத்துவம் மிக்க மக்களாக நாம் விளங்குகிறோம். நமது தாயகப் பிரதேசமும் வியூக முக்கியத்துவம் மிக்கதாக இருக்கிறது.

அனைத்துலக அரங்கில் அனைத்துலக நாடுகளால் எடுக்கப்படும் முடிவுகள் அவர்களின் நலன்களின் பாற்பட்டுத்தான் எடுக்கப்படுகின்றன. அனைத்துலக ஒழுங்கு தர்மத்தின் சக்கரத்தில் சுழல்வதில்லை, மாறாக நலன்கள் என்ற அச்சிலேயே சுற்றுகின்றது எனத் தேசியத் தலைவர் முன்னொரு தடவை அழகாகக் குறிப்பிட்டிருந்தார். தேசியத் தலைவரது வார்த்தைகள் எவ்வளவு தீர்க்கதரிசனம் மிக்கவை என்பதனை நாம்இன்று தெளிவாக உணர முடிகிறது.

இலங்கைத்தீவில் கரிசனை கொண்டுள்ள பலமிக்க அனைத்துலக நாடுகள் ஒடுக்கப்பட்ட, இனவழிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களின் பக்கம் தமது ஆதரவினை வெளிப்படுத்தும் நிலையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக தமது நலன்களை வென்றெடுக்கக்கூடிய அரசாங்கத்தை இலங்கைத் தீவில் அமைப்பதிலும், அந்த அரசாங்கத்தைப் பாதுகாப்பதிலுமே அனைத்துலக அரசுகள் கூடுதல் கவனம் செலுத்துகின்றன. அதற்கேற்ற வகையில் உள்நாட்டு நிலைமைகளைக் கையாள்வதே அரசுகளது அணுகுமுறையாக இருக்கிறது.

இச் சூழலில் அனைத்துலக அரசுகளைக் கையாள்வதில்இருவகையானபோக்குகளை ஈழத் தமிழர் அரசியலில் நாம் காணமுடிகிறது. ஒரு போக்கு அனைத்துலக அரசுகளின் கடைக்கண் பார்வைக்காகக் காத்துக் கிடக்கிறது. அனைத்துலக நாடுகளின் நிலைப்பாடுகளை எவ்வித எதிர்ப்புமின்றி அப்படியே ஏற்றுக் கொண்டு, எங்களையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள் என்று அது அவர்களிடம் கெஞ்சுகிறது. அனைத்துலக அரசுகளுக்குப் போதிய அழுத்தத்தை வியூக முக்கியத்துவம் மிக்க மக்கள் என்ற நிலையில் இருந்து இப் போக்கைப் பின்பற்றும் தலைவர்கள் கொடுப்பதில்லை.

இதனால் வாயளவில் இவர்களைப் புகழ்ந்து பேசும் நாடுகள் தத்தமது செயற்தளத்தில் இவர்களைப் பொருட்படுத்துவதேயில்லை. ஆனால் இப் போக்கைப் பின்பற்றும் தலைவர்களோ 'அனைத்துலக அரசுகளுடன் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். நல்ல முன்னேற்றங்கள் விரைவில் ஏற்படும். அனைத்துலக அரசுகளைப் பகைத்துக் கொண்டு எதுவும்செய்ய முடியாது' என்ற வகையிலான ஆறுதல் வார்த்தைகளைத் தமக்குத்தாமே தெரிவிப்பதுடன் மக்களுக்கும் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

இரண்டாவது போக்கு, தமது நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளாத அனைத்துலக நாடுகளை முற்றாக நிராகரித்து, தன்னைத்தானே அனைத்துலக அரங்கில் இருந்து அந்நியப்படுத்திக் கொள்கிறது. தமிழ் மக்களின் நலன்களுக்கு மாறான அனைத்துலகநாடுகளின் செயற்பாடுகளை கடுமையாகக் கண்டிப்பதுடன் இவற்றை 'அனைத்துலகச்சதி' என்ற நோக்கு நிலையில் இருந்து அணுகுகிறது. அனைத்துலக அரசுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்படுவதில் பெரிய பயமெதுவுமில்லை என்ற கருத்தினை இப்போக்கினைக் கொண்டுள்ளோர் வைத்திருப்பதால் இப்போக்கு அனைத்துலக அரசியல் இராஜதந்திரச் செயற்பாடுகளில் போதிய ஆர்வமற்றும் இருக்கிறது.

இவ் இரண்டு போக்குகளும் தமிழ் மக்கள் அனைத்துலகச் சமூகத்தைக் கையாள்வதற்குப் பொருத்தமற்றவை என நாம் கருதுகின்றோம். இதனால் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இவ் இரண்டு போக்குகளுக்கும் உட்படாத மூன்றாவது புதிய போக்கினைத் தனது அணுகு முறையாகக் கொண்டிருத்தல் அவசியம் எனக் கருதி அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம்.

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் அனைத்துலக அரசியலினதும் புவிசார் அரசியலினதும் பலமிக்க அனைத்துலக அரசுகளின் பாத்திரத்தை நாம்நிராகரிக்கவில்லை. மாறாக அவற்றின் முக்கியத்துவத்தை நன்கு புரிந்து கொண்டு அவற்றை எமக்குச் சாதகமாக எவ்வாறு கையாள்வது என்பது குறித்துச் சிந்திக்கிறோம். இதனால் அனைத்துலக அரசுகளை நாம் நிராகரிக்கவில்லை. இதே வேளை தமிழர் தலைவர்கள் எவரும் அனைத்துலக அரசுகளின் கைப்பாவையாக இயங்குவதையோ, தமிழீழ மக்களின் நலன்களுக்குப் பாதகமான அனைத்துலக அரசுகளின் முடிவுகளை எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொள்வதனையோ நாம் நிராகரிக்கிறோம்.

எமது இந்த அணுகு முறையினை ஒரு செயற்பாட்டு உதாரணத்தின் மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை 2015 ஆம் ஆண்டு அரசின் பொறுப்பில் நிலை மாறுகாலகட்ட நீதிப் பொறிமுறையை ஒப்படைத்தமை இவ் அரசுகளின் நலன்களின் பாற்பட்ட, அதே வேளை தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரானதொரு நடவடிக்கையாக அமைந்தது. இதனை தமிழ் அரசியற் தலைவர்களில் ஒரு தரப்பு எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொண்டது. மறு தரப்பு முழுமையாக நிராகரித்துக் கண்டனங்களை எழுப்பியது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்இம்முடிவினை காரணகாரியங்களுடன் கண்டித்ததுடன் அரசின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு MAP எனும் அனைத்துலக நிபுணர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழுவை அமைத்தது. இக்குழுவின் கண்காணிப்பு ஐ.நா. அறிக்கையின் அடிப்படையில் அனைத்துலக அரங்கில் செயற்பட்டு வருகிறது. இதன் மூலம் அனைத்துலக சமூகத்தினை எமது நோக்கு நிலையில் இருந்து அணுகுவதற்கான அரங்கை அமைப்பதில் நாம் முன்னோக்கி நகர்ந்துள்ளோம். எம்மால் அமைக்கப்பட்ட கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்றத்தில் அனைத்துலக நாடுகளால் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதனையும் எம்மால்நன்கு உணர முடிகிறது.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முள்ளிவாய்க்காலுடன் முடிவுக்கு கொண்டு வந்து விடலாம் என்ற சிங்களத்தின் எதிர்பார்ப்பு பகற்கனவாகியிருக்கிறது. இலங்கைத்தீவு ஒரு நாடு எனவும் அங்கு வாழ்வோர் அனைவரும் ஒரு மக்கள் எனவும் சிங்களப் பெரும்பான்மைக்குள் தமிழ், முஸ்லிம் மக்களைப் புதைத்து விடச் சிங்களம் எடுத்துவரும் முயற்சிகள் இதுவரை வெற்றியளிக்கவில்லை. இருந்தும் இம் முயற்சிகளைச் சிங்களம் கைவிடுவதாகவில்லை. நாம் சிறுவர் கதைகளில் படித்த மீண்டும் மனந்தளராத விக்ரமன் போல சிங்களம் வெவ்வேறு உத்திகளுடன் இம் முயற்சியினை முன்னெடுத்தவாறே உள்ளது. சிங்கள மேலாண்மையினைத் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலைநிறுத்தும் திட்டத்தின் பின்னைய முயற்சியாக புதிய அரசியலமைப்பு ஆக்க முனைப்பு அமைந்திருக்கிறது. தமிழின அழிப்புக்குற்றச்சாட்டுகளில் இருந்தும் போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்தும் கவனத்தைத் திசை திருப்பும் நோக்குடன், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையே முதன்மை இலக்காகக் கொண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதான தோற்றத்தை அனைத்துலக நாடுகளின் அனுசரணையுடன் சிங்களத் தலைவர்கள் ஏற்படுத்தினர். இதற்குச் சில தமிழ்த் தலைவர்களும் துணை போயினர்.

காலத்தைத் தமக்குச் சாதகமாக இழுத்தடிக்கும் வகையில் ஏற்பாடுகளையும் சிங்களத் தலைவர்கள் மேற்கொண்டனர். பெயர் குறிப்பிடாத ஒரு சமஷ்டி வருகிறது என்று தமிழ்த் தலைவர்களும் முரசறைந்து ஆரவாரம் செய்தனர். ஆனால், இதுவரைவெளியாகியுள்ள இடைக்கால அறிக்கையோ அல்லது கிடைக்கும் ஏனைய தகவல்களோ சிங்கள பௌத்த மேலாண்மையினை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே புதிய அரசியல்யாப்பு அமையும் என்பதனைச் சுட்டுகின்றன. தமக்குத் தேவையானவளவு கால அவகாசத்தை எடுத்த பின்னர் புதிய யாப்பு முயற்சியினை சிங்களத் தலைவர்கள் கைவிட்டு விடுவார்கள் என்றும் சில அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எது எவ்வாறாக இருந்தாலும், தமிழ் மக்களுக்கான அரசியற்தீர்வு நாம் ஒரு தேசம் என்ற தகைமை கொண்ட மக்கள் எனும் நிலை அங்கீகரிக்கப்பட்ட போது எட்டப்பட வேண்டும் என்றே நாம் கருதுகிறோம். தமிழீழ மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துக் கொண்ட மக்கள் என்ற நிலை ஏற்றுக் கொள்ளப்பட்டு, இனவழிப்புக்குள்ளாகும்நிலையில் பரிகார நீதி யினைக் கோரிநிற்கும் தேசம் என்பது அங்கீகரிக்கப்பட்ட வகையிலேயே அரசியற் தீர்வு முயற்சிகள் அமைய வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கருதுகிறது.


இதன்பாற்பட்டு, தமிழீழ மக்களுக்கான அரசியற் தீர்வு என்பது ஈழத்தமிழரது தாயகப் பிரதேசங்களிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் ஒரு தனித்துவமான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டு,ஈழத் தமிழர் தேசத்தின்ஆணை பெறப்பட்டே முடிவு செய்யப்பட வேண்டும்என நாம் அறைகூவல் விடுக்கிறோம்.

தமிழ் மக்கள் ஒரு தேசம் என்ற நிலையினையோ, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய மக்கள் என்ற நிலையினையோ ஏற்றுக்கொள்ளாத, முழு நாட்டுக்குமான ஒரு அரசியலமைப்புக் குறித்து நடத்தப்படும் எந்தவொரு பொதுவாக் கெடுப்பையும் அரசியற்தீர்வு முயற் சியின் பகுதியாகத் தமிழ மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

நாம் மாவீரர்களை நினைவு கூரும் இவ்வேளையில் அவர்களின் அரசியற்கனவுகளை எமது மனங்களில் இருத்திக் கொள்வது அவசியமானதாகும். நாம் மாவீரர்களை நினைவு கூர்வது என்பது எமது பண்பாட்டின்பாற்பட்ட ஒரு சடங்காக மட்டும் அமைந்து விடக்கூடாது.

**விசுவநாதன் ருத்ரகுமாரன்**

# ஏற்றம் தரும் எலுமிச்சை



தாவரவியல் பெயர் :- சிட்ரஸ் அவ்றான்டிபோலியா **Citrus aurantifolia**
தாவரக் குடும்பம் :- ரூட்டேசியே **Rutaceae**

தமிழர்களாகிய எமது சமய கலாசார சுப காரியங்களில் முதல் இடம் வகிப்பது எலுமிச்சம் பழமாகும். எலுமிச்சையின் தாயகம் தென்கிழக்காசிய நாடுகளாகும். பெரும்பாலும் வெப்ப மற்றும் மித வெப்ப மண்டலப் பகுதிகளில் இது வளர்கின்றது. இருப்பினும் வெப்ப வலயங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்கையில் நீர்ப்பாசனம் மேற்கொள்ளல் அவசியமாகும். குறுஞ்செடி வகைத் தாவரமாக எலுமிச்சை அறியப்படுகிறது. இத் தாவரத்தின் பழமானது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

நீள்வட்ட வடிவ, மஞ்சள் நிறமுடைய பழமானது பல சோணைகளை கொண்டதாககாணப்படும் இச்சோணைகளில் சேமிக்கப்பட்டுள்ள பழச்சாறானது பிரித்தெடுக்கப்பட்டு சமையல்மற்றும்சமையல் அல்லாத நோக்கங்களுக்காகப் பயன்படுகிறது. உணவு மற்றும் சுத்திகரிப்பிற்காக எலுமிச்சம் சாறு பயன்படுத்தப்படுகின்றது. முதன் முதலாக 1784இல் கார்ஸ்வில் ஹெம்மீலி என்பவர் எலுமிச்சையில் சிட்ரிக் அமிலம் இருப்பதைக் கண்டுபிடித்தார். இதில் சுமார் 5% முதல் 6% சிட்ரிக் அமிலம் உள்ளது, இப் புளிப்புச்சுவை எலுமிச்சைப் பானம் போன்ற உணவுகளில் ஒரு முக்கிய மூலப்பொருளாக அமைய காரணமாக அமைகிறது.

கண்களைப் பறிக்கும் மஞ்சள் நிறத்தில் மங்களகரமாய் காட்சிதரும் எலுமிச்சை பழத்தில் விற்றமின் சி சத்து மற்றும் கல்சிய சத்து அதிகம் நிறைந்துள்ளது.

100 கிராம் எலுமிச்சை பழத்தில்,

- நீர் - 50 கிராம்
- கொழுப்பு - 1.0 கிராம்
- புரதம் - 1.4 கிராம்
- மாப்பொருள் - 11.0 கிராம்
- நார்ச்சத்து - 1.2 கிராம்
- கல்சியம் - 0.80 மி.கி.
- விற்றமின் சி - 63.0 மி.கி

போன்றவை காணப்படுகின்றது.

தேசிச்செய்கைக்கு சிறந்த நீர் வடிப்புள்ள சேதனப் பொருட்கள் நிறைந்த இருவாட்டி மண் உகந்தது. மண்ணின் ஆழம் 2 மீற்றர் ஆகவும் மண் pH 5-6 வரை இருத்தல் நன்று. தேசிப்பயிர்ச் செய்கையில் நடுகைப்பொருட்களாக வித்து மூலம் இனம் பெருக்கப்பட்ட நாற்றுக்கள், ஒட்டுதலின் மூலம் இனம் பெருக்கப்பட்ட நாற்றுக்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

நாற்றுக்கள் தோட்டத்தில் 4மீற்றர் X 4மீற்றர் இடைவெளியில் நடுகை செய்யப்படும்.

60 செ.மீ நீள அகல ஆழமுள்ள குழிகள் வெட்டப்பட்டு நடுவதற்கு இரு கிழமைகளிற்கு முன்னதாக மேல் மண், கூட்டெரு என்பன 1:1 என்ற விகிதத்தில் கலந்து நடுகைக்குழி நிரப்பப்படும். பின்பு நாற்றின் மண்மட்டமும் நிலத்தின் மண்மட்டமும் ஒன்றாக இருக்கக்கூடியவாறு நடுதல் வேண்டும்.

எலுமிச்சை பயிர்ச்செய்கையில் சிறப்பான முகாமைத்துவத்திற்கு கத்தரித்தல் மற்றும் பயிற்றுவித்தல் அவசியமானதாகும். ஆரம்பத்தில் நிலமட்டத்திலிருந்து 60-75 செ.மீ உயரம் வரை பக்கக்கிளைகள் எதுவும் அனுமதிக்காது தனிமரமாக வளர்க்க வேண்டும். அதன் பின்பு முதலாவது கிளையை வளர அனுமதிக்க வேண்டும். இரண்டாவது கிளையானது முதற்கிளையில் இருந்து 15 செ.மீ உயரத்தில் அதன் எதிர்த்திசையில் அனுமதிக்கப்படும். இவ்வாறே முன்றாம், நான்காம் கிளைகளும் ஓர் சுற்றுவட்ட ஒழுங்கில் அமையுமாறு வளரவிடப்படும். இறுதியாக மரம் 2மீற்றர் உயரத்தை அடைந்தவுடன் அதன் நுனி அரும்பை அகற்றி உயரம் மட்டுப்படுத்தப்படும். இடையிடையே தோன்றும் நீர்வாதுக்கள் கூரிய கத்திகள் மூலம் அகற்றப்படும். இவ்வாறு ஏற்பட்ட காயங்களிற்கு போடோ கலவை இடப்பட்டு தொற்றுதலிலிருந்து பாதுகாக்கப்படும்.

இவ்வாறு பராமரிப்பு நடவடிக்கைகளை சரிவர மேற்கொண்டுவர மூன்றாவது வருடத்திலிருந்து அறுவடையினை பெற்றுக்கொள்ள முடியும்.

## மருத்துவக் குணங்கள்

மருத்துவர் ப்ளென்னின் (1875) ஆராய்ச்சியில் கெட்ட இரத்தத்தை தூய்மைப்படுத்தும் மருந்துகளில் எலுமிச்சையை விட சிறந்தது வேறு இல்லை என கண்டறிந்தார். இரண்டாவது உலகப் போரின் போது ஜெர்மனிய வீரர்களின் காயத்தில் இருந்து ஒழுகும் இரத்தத்தை உடனடியாக நிறுத்த எலுமிச்சையை உபயோகப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. மேலும் எலுமிச்சை

- உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது.
- பசியைத் தூண்டுவதுடன் சமிபாடடைதலையும் இலகுவாக்கும்.
- மலச்சிக்கலை நீக்க உதவும்.
- சிறந்த தொற்று நீக்கியாக தொழிற்படும்.
- தடிமனை குணப்படுத்த உதவுகின்றது.

## எலுமிச்சை தோல்


எலுமிச்சை பழத்தின் தோல், தோல் சம்பந்தப்பட்ட நோய்களைப் போக்கி சருமத்திற்கு பளபளப்பைத் தருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். எலுமிச்சம் பழத்தோலில் அதிக சக்தி கொண்ட எண்ணெய் இருப்பதை அறிந்தனர். இது பலவகையான நறுமணத் தைலங்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. மேலும் வாதம், எரிச்சல், தொண்டைப்புண் போன்றவற்றிற்கு அருமருந்தாக தொழிற்படுகின்றது.

இவ்வாறான பல்வேறு மகத்துவம் நிறைந்த இலாபம் தரும் எலுமிச்சையை பயிர் செய்து வாழ்வில் நாமும் ஏற்றம் பெறுவோம்.


கி.ஸ்கொட் பசீலன்
விவசாயப் போதனாசிரியர்.
கரவெட்டி.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1262

ரமேஷ்




கணேஷ்




சுரேஷ்




கமலேஷ்




கார்மேகன்




சாய்ராம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடமாகாண சபைத் தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான முன்மொழிவுகள்

(இது கட்டுரை ஆசிரியரின் தனிப்பட்ட முன்மொழிவுகள்)

தொடர்ச்சி: உடுப்பிட்டி- அச்சுவேலி தேர்தல் தொகுதி

| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| ஜே/348 கரணவாய் தெற்கு | 1736 |
| ஜே/349 கரணவாய் மேற்கு | 2034 |
| ஜே/350 கரணவாய் | 1624 |
| ஜே/351 கரணவாய் கிழக்கு | 1348 |
| ஜே/352 உடுப்பிட்டி | 1460 |
| ஜே/353 உடுப்பிட்டி வடக்கு | 1929 |
| ஜே/354 உடுப்பிட்டி தெற்கு | 1027 |
| ஜே/355 வல்வெட்டி | 997 |
| ஜே/356 வல்வெட்டி மத்தி | 1275 |
| ஜே/357 சமரபாகு | 1472 |
| ஜே/358 இமையாணன் | 1901 |
| ஜே/359 இமையாணன் கிழக்கு | 2213 |
| ஜே/360 கரணவாய் வடக்கு | 1669 |
| ஜே/361 கரணவாய் வடமேற்கு | 1581 |
| ஜே/362 கரணவாய் மத்தி | 1255 |
| ஜே/363 கரவெட்டி மேற்கு | 1696 |
| ஜே/364 கரவெட்டி வடக்கு | 1026 |
| ஜே/365 கரவெட்டி தெற்கு | 751 |
| ஜே/366 மாத்தன் | 837 |
| ஜே/367 கரவெட்டி மத்தி | 1305 |
| ஜே/368 கரவெட்டி கிழக்கு | 1321 |
| ஜே/369 கட்டைவேலி | 1176 |
| ஜே/375 நெல்லியடி வடக்கு | 1146 |
| ஜே/376 நெல்லியடி | 1072 |
| ஜே/377 நெல்லியடி கிழக்கு | 1379 |
| ஜே/378 ஆத்தாய் | 746 |
| மொத்தம் | 35983 |

| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| ஜே/271 சிறுப்பிட்டி | 1845 |
| ஜே/272 சிறுப்பிட்டி மேற்கு | 2088 |
| ஜே/273 புத்தூர் மேற்கு | 3173 |
| ஜே/274 புத்தூர் வடக்கு | 1603 |
| ஜே/275 நவக்கிரி | 1335 |
| ஜே/276 ஆவரங்கால் கிழக்கு | 1256 |
| ஜே/277 ஆவரங்கால் மேற்கு | 2414 |
| ஜே/278 புத்தூர் கிழக்கு | 3556 |
| ஜே/279 அச்செழு | 3241 |
| ஜே/281 பத்தைமேனி | 2342 |
| ஜே/282 தம்பாலை- கதிரிப்பாய் | 1874 |
| ஜே/283 இடைக்காடு | 833 |
| ஜே/284 வளலாய் | 860 |
| ஜே/285 அச்சுவேலி வடக்கு | 2037 |
| ஜே/286 அச்சுவேலி தெற்கு | 2798 |
| ஜே/287 அச்சுவேலி மேற்கு | 2349 |
| மொத்தம் | 33604 |

இத்தேர்தல் தொகுதியின் மொத்த மக்கள் தொகை 69587 ஆகும்.

## பருத்தித்துறை தேர்தல் தொகுதி

இந்த பாராளுமன்ற தேர்தல் தொகுதி 1960 இல் இருந்து 1989 வரை இருந்துள்ளது.

இந்தத் தேர்தல் தொகுதி தொண்டைமானாறு முகத்துவாரத்திலிருந்து நல்லதண்ணி தொடுவாய் வரை நீண்டு காணப்படுகின்றது.

இத்தொகுதி இன்றைய வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக முன்பு இருந்தது. இத்தேர்தல் தொகுதி கரையோரப் பகுதியில் வாழும் மீனவ சமூக நலன் கருதி உருவாக்கப்பட்டது. இந்த எனினும் இன்றும் தேவைப்படுகின்றது. யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மீனவ சமூக நலன்களை கவனத்திற் கொள்ளவும் அழிவுக்குட்பட்ட வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகர்களை புனருத்தாரணம் செய்யவும் துறைமுகங்களை விருத்தி செய்யவும் மேலும் பின் தங்கிய வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தியை துரிதப்படுத்த இத்தொகுதி அமைவது தேவையாயுள்ளது. வடமராட்சி வடக்கு (47565), வடமராட்சி கிழக்கு(12766) பிரிவுகளின் மக்கள் தொகை 60331 பேராக இருப்பதால் இவ்விரண்டு பிரிவு மக்கள் தொகை தனித் தொகுதி அமைப்பதற்கு போதாமல் இருக்கின்றது. இதனால் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் இரு ந்து துன்னாலை கிராமமும், அல்வாய் கிராமமும் இத் தொகுதியின் கீழ் கொண்டு வரப்படுகின்றன.

இவ்விரண்டு கிராமங்களும் வடமராட்சி வடக்கு பிரதேச செய லகப் பிரிவு அண்மித்த கிராமங்களாகும்.

இத்தேர்தல் தொகு தியின் நிலப்பரப்பும், மக்கள் தொகையும் பின்வருமாறு,

| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவு முழுமையாக | 47565 |
| வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகப்பிரிவு முழுமையாக | 12766 |
| வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் பின்வரும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| ஜே/370 துன்னாலை தெற்கு | 1387 |
| ஜே/371 துன்னாலை கிழக்கு | 1240 |
| ஜே/372 துன்னாலை | 678 |
| ஜே/373 துன்னாலை மத்தி | 635 |
| ஜே/374 துன்னாலை மேற்கு | 1205 |
| ஜே/378 அல்வாய் | 1484 |
| ஜே/379 அல்வாய் தெற்கு | 1401 |
| ஜே/380 அல்வாய் | 1521 |
| மொத்தம் | 9557 |

இத்தேர்தல் தொகுதியின் மொத்த மக்கள் தொகை 698821 ஆகும்.

## சாவகச்சேரி தேர்தல் தொகுதி

சாவகச்சேரி பாராளுமன்றத் தேர்தல் தொகுதி 1947-1989 வரை இருந்துள்ளது. 1947-1960 இடைப்பட்ட சாவகச்சேரி தேர்தற் தொகுதி, தென்மராட்சி, பச்சிலைப்பளை கரைச்சி, கண்டாவளை , பூநகரி, துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது.

1960க்கு பின்னர் சாவகச்சேரி தேர்தற் தொகுதியும் தென்மராட்சி பிரதேசமும் தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவும் ஒத்த பரப்பையே கொண்டுள்ளன. மேலும் தென்மராட்சி பிரதேசம் தனித்துவமான ஒரு புவியியற் பிரதேசமாகும்.

எனவே சாவகச்சேரி தேர்தல் தொகுதி தென்மராட்சி பிரதேசம் முழுவதையும் உள்ளடங்கியும் வேறு பிரதேசங்களை உள்ளடக்காமல் இருப்பதும் விரும்பத்தக்கது.

சாவகச்சேரி பிரதேச செயலகப்பிரிவு இந்த குடித்தொகை யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் தொகுதியின் சராசரி மக்கள் தொகை யில் இருந்து 10% க்கு குறைவாக இருக்கின்றது. மாவட்ட தேர்தற் தொகு திகளின் சராசரி மக்கள் தொகையிலும் பார்க்க சாவகச்சேரி பிரதேச செயலகப்பிரிவு மக்கள் தொகை 11.35% குறை வாக இருக்கின்றது.

சாவகச்சேரி தேர்தற் தொகுதியை நிர்ணயம் செய்ய ஆகக்குறைந்தது 65686 பேர் இருக்க வேண்டும்.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண மாகாணத் தேர்தல் தொகுதி நிர்ணயக் குழு தென்மராட்சிப் பிரதேசத்தின் பண்புகளைக் கருத்திற்கொண்டு அதனது நியமத்தில் விலக்களித்து சாவகச்சேரி தொகுதியை தென்மராட்சி பிரதேசத்திற்கு ஒத்ததாக உருவாக்கலாம். அல்லது வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தென்மராட்சிக்கு தொடர்ச்சியாகவுள்ள ஜே/280 வாதரவத்தை கிராம அதிகாரி பிரிவையும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரிவிலுள்ள ஜே/ 382 கப்பூது கிராம அதிகாரி பிரிவும் சாவகச்சேரி தேர்தல் தொகுதியின் கீழ் கொண்டு வரப்பட்டு மக்கள் தொகை நியமத்தை பூர்த்தி செய்யலாம். வாதரவத்தை யாழ். கடல் நீரேரியிலும் கப்பூது வடமராட்சி கடல் நீரேரியிலும் தனித்தீவுகளாக உள்ளதுடன் தென்மராட்சியுடன் மிக நெருங்கிய தொடர்புடைய அயல் கிராமங்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தொகுதியின் மக்கள் தொகை போதியதாக இல்லையெனக் கருதுமிடத்து அரியாலை கிழக்கு பகுதிகளை இத்தொகுதிக்குள் சேர்க்கக் கூடிய நிலை காணப்படுகின்றது.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இத்தேர்தல் தொகுதிகள் அடங்கும் நிலப்பரப்பும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவு | 64704 |
| வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் ஜே/280 வாதரவத்தை கிராம அதிகாரி பிரிவு | 1035 |
| வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் ஜே/382 கப்பூது கிராம அதிகாரி பிரிவு | 280 |
| மொத்தம் | 65943 |

இத்தேர்தல் தொகுதியின் மக்கள் தொகை 65943 ஆகும். (தொடரும்)

## ஜனாதிபதியை விமர்சனம் செய்த விவகாரம்

# பிரதியமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் பதவி விரைவில் பறிக்கப்படும்!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தினாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நீதி மற்றும் தொழிலுறவுகள் பிரதியமைச்சர் சுஜீவ சேனசிங்கவின், பிரதியமைச்சர் பதவியைப் பறிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பில், தான் கடுமையான அதிருப்தி கொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ள இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க, "சிலருடைய தேவைகளுக்காக, ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் அரசியல்வாதிகளை சின்னாபின்னமாக்குவதற்கு, ஜனாதிபதி பங்குதாரராக இருக்கக்கூடாது" என்றும் கேட்டுக் 'கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், கடந்த 21ஆம் திகதியன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

பிரதியமைச்சரின் குற்றச்சாட்டுத் தொடர்பில் கடும் அதிருப்தி கொண்ட, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள், இந்த விவகாரம் தொடர்பில், கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கும் கட்சியின் தவிசாளர் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவின் கவனத்துக்கும் கொண்டு வந்தனர்.

இந்நிலையிலேயே, அவருக்கு எதிராக, கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு, ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அறிய முடிகின்றது. அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அழைப்பதற்கு முன்னர், பிரதியமைச்சர் பதவியை, சுஜீவ சேனசிங்கவிடமிருந்து பறிப்பதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.

பிரதியமைச்சரின் பதவியைப் பறிக்கும் அதிகாரம், ஜனாதிபதி கைகளில் இருப்பதால், ஜனாதிபதியே அது தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்கவேண்டுமென, அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இதேவேளை எவ்வாறோ, நிக்கவரெட்டிய பிரதேசத்தில், கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, "ஊழல், மோசடிக்கு எதிராகத் தீர்மானங்களை எடுக்கும்போது, அதற்கு எதிராகவும் எனக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின், சகல பதவிகளை இராஜினாமா செய்துவிட்டு, மக்களுடன் கைகோர்த்து முன்னோக்கிப் பயணிப்பதற்கு நான் தயார்" எனத் தெரிவித்திருந்தார்.



"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம், தவறு செய்தமையால்தான், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் 2015ஆம் ஆண்டு தோல்வியடைந்தார்.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டே, அவ்வாறான பிழைகளை செய்துகொண்டு மற்றும்குறைபாடுகளுடன்செயற்பட்டார்கள் எனின், மக்கள் அதனை அனுமதிக்கமாட்டார்கள்"என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நல்லாட்சி அரசாங்கம் நகைப்பிற்குள்ளானது!

## அமைச்சர் செனவிரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் நகைப்பிற்குரியதாக மாறியுள்ளது என தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஆளும் கட்சியின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வதும், விமர்சனம் செய்வதும் அதிகரித்துள்ளது.

இதனால் நல்லாட்சி அரசாங்கம் நகைப்பிற்குள்ளாகியுள்ளது. சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரை விமர்சனம் செய்கின்றனர். சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியை விமர்சனம் செய்கின்றனர்.

என்ன நடக்கப் போகின்றது? ஒழுக்கமற்ற செயலே அரங்கேறுகின்றது. இவ்வாறு விமர்சனம் செய்வது பாரதூரமான பிழையாகும், இது அரசாங்கத்தின் இருப்பினை மோசமாக பாதிக்கும் என ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# விஜயாபிமானி பாராட்டுவிழா ஜனாதிபதியின் தலைமையில்




(கொழும்பு)

வடமேல்மாகாண தொழில் முயற்சியாளர்களை பாராட்டும் "விஜயாபிமானி" பாராட்டு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

குருநாகலையிலுள்ள மாகாண சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் வடமேல் மாகாண பொருளாதாரத்திற்கு நேரடிப் பங்களிப்புகளை வழங்கும் தொழில் முயற்சியாளர்களை பாராட்டி அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் வடமேல்மாகாண சபையின் வழிகாட்டலில் வடமேல் மாகாண விவசாய சேவைகள் பணியகம் இவ்விருது விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான எஸ்.பி. நாவின்ன, றிசாத் பதியுதீன், பிரதி அமைச்சர் தாரானாத் பஸ்நாயக்க, வடமேல் மாகாண ஆளுநர் அமரா பியசீலி ரத்நாயக, முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# காணாமல் போனோரை தேடிய மூன்று வெளிநாட்டவர்களுக்கு ரூ.256 மில்.வழங்கிய மகிந்த

(கொழும்பு)

இலங்கையில் பணியாற்றிய மூன்று வெளிநாட்டு அதிகாரிகளுக்கு 256 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் காணாமல் போன ர்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரிக்கப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் மூன்று வெளிநாட்டவர்கள் செயற்பட்டுள்ளனர்.



குறித்த மூவரின் தங்குமிட செலவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக 256 மில்லியன் ரூபா இலங்கை மத்திய வங்கியினால் செலுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச அதிகாரிகள் மூவர், காணாமல் போனோர் தொடர்பில் ஆராய்வதற்கான ஆணைக்குழுவின் ஆலோசகர்களாக அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டனர்.

2014-07-15 ஆம் திகதியில் 1871/18 என்ற இலக்க வர்த்தமானியின் ஊடாக குறித்த மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எவ்வித திரும்பச் செலுத்தல் அடிப்படைகளின்றி குறித்த மூவருக்கும் நிதி வழங்குவதற்கு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநராக செயற்பட்ட அஜித் நிவாட் கப்ராலுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆட்சியின் போது மத்திய வங்கியின் செயற்பாடு தொடர்பில், கணக்காய்வாளர் திணைக்களம் மேற்கொண்ட விசேட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் இலங்கை மத்திய வங்கி மற்றும் குறித்த வெளிநாட்டவர்கள் மூவருக்கும் இடையில் எவ்வித ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# புலனாய்வு அதிகாரிகளின் தொலைபேசிகள் பொலிஸ்மா அதிபரால் கண்காணிப்பு

(கொழும்பு)

புலனாய்வுத்துறை அதிகாரிகளின் தொலைபேசிகள் பொலிஸ்மா அதிபரால் கண்காணிக்கப்பட்டதாக இலங்கையின் புலனாய்வுத்துறை தலைவர், பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரட்ன தெரிவித்துள்ளார். ஆங்கில ஊடகம் ஒன்று குறித்த செய்தியை வெளியிட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் கடந்த வார இறுதியில் இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் இந்த தகவலை வெளியிட்டார்.



இதேவேளை, சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் சமர வீரவும் இதே குற்றச்சாட்டை சுமத்தினார்.

விசாரணை ஒன்றுக்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் குழுவினரின் தொலைபேசிகளே பொலிஸ்மா அதிபரால் கண்காணிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## தீமைக்கும் நன்மை செய்!



சேற்றில் செந்தாமரை பூப்பதைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் பாற்கடலில் கள்ளிச் செடி முளைக்குமா? உயர்ந்த, நல்ல குலத்தில் மோசமானவர்கள் தோன்றுவார்களா? ஏன் தோன்ற மாட்டார்கள்? ஒருவன் நல்லவனாக இருப்பதும் கெட்டவனாக இருப்பதும் அவனவன் வளர்ந்த விதத்தினாலும் நண்பர்களின் சகவாசத்தாலும் தானே தவிர, பிறப்பில் என்ன இருக்கிறது? பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். அவரவர் நடத்தை தானே அவரவரின் பண்பு நலனைத் தீர்மானிக்கிறது? அப்படித்தான் பிறந்தான் கௌதமன். மிக நல்ல குலத்தில் தோன்றியவன் தான். ஆனால் நண்பர்கள் சேர்க்கை சரியில்லை. எனவே மருந்துக்குக் கூட அவனிடம் நல்ல குணம் இருக்கவில்லை.

ஆனால் அவன் காலத்தில் ராஜ தர்மன் என்ற பெயரில் ஒரு கொக்கு வாழ்ந்து வந்தது. தேவர்களும் போற்றும் நற்குணங்கள் நிறைந்த கொக்கு. பறவைக் குலத்தையே பெருமைப்படுத்திய பறவை அது. அதே சமகாலத்தில் விரூபாட்சன் என்ற ஓர் அரக்கனும் வாழ்ந்து வந்தான். அவன் பிறந்ததோ அரக்கர் குலம். ஆனால் அவனை அவனது உயர்ந்த நற்குணங்களுக்காக வானவர்களும் கொண்டாடினார்கள். ஒரு மனிதன், ஒரு பறவை, ஓர் அரக்கன் என்ற இந்த மூன்று பாத்திரங்களை உள்ளடக்கி, நன்றியுணர்வின் பெருமையையும் விருந்தோம்பலின் மேன்மையையும் விளக்கி மகாபாரதம் ஓர் அழகிய கதையைச் சொல்கிறது: கௌதமன் வடிகட்டின சோம்பேறி. பிறரது உழைப்பில் வாழ்வதைத் தனது தர்மம் போல் கொண்டிருந்தான்.

தந்தை பெரிய பண்டிதர். அவர் கடின உழைப்பின் பேரில் சம்பாதித்த பணத்தில் உலகின் எல்லா சுகங்களையும் சந்தோசமாக அனுபவித்தான். கணவனை இழந்த ஒரு பெண்ணின் மேல் அவனுக்கு மையல் வந்தது. அவளுடன் வாழ்க்கை நடத்தலானான். தந்தையான அந்தப் பண்டிதர், இவனது அட்டகாசங்கள் தாங்காமல், துயரவசப்பட்டு அந்தத் துயரக் கடலிலேயே மூழ்கிக் கரைசேர முடியாமல் ஒரு நாள் மூழ்கிவிட்டார். தந்தை உழைப்பில் சொகுசாக வாழ்ந்து வந்த கௌதமனுக்கு, இப்போது சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. வேட்டையாடிப் பிழைக்கலானான். உயர்ந்த குலத்தில் பிறந்த அவன் உயிர்க்கொலை பாவம் என்பதைப் பொருட்படுத்தவில்லை.

உயிர்களைக் கொல்வது அவனுக்கு ஒரு விளையாட்டுப் போல் இருந்தது. வெளியூரில் இருந்த அவன் தந்தையின் நண்பர் ஒரு நாள் அந்த ஊருக்கு வந்தார். கௌதமனின் செயல்களைக் கண்டார். அவர் அடைந்த வருத்தத்திற்கு அளவே இல்லை. 'எப்பேர்ப்பட்ட தந்தையின் மகன் அப்பா நீ? உயிர்க்கொலை செய்யலாமா? ஏதாவது வியாபாரம் செய்து பிழைக்கப் பார்!' என்று அவர் அன்போடு அறிவுறுத்தி விட்டுச் சென்றார்.

பூர்வ ஜென்ம நல்வினை காரணமாகவோ என்னவோ கௌதமன் மனம் அந்த அறிவுரை பற்றிச் சிந்தித்தது. சரி, உயிர்க்கொலையை விட்டுவிடுவோம் என்று முடிவுசெய்தான். வியாபாரம் பழக வேண்டுமானால் முதலில் ஏதாவது வியாபாரிகளின் கூட்டத்தோடு இணைந்து தொழில் கற்றுக் கொள்ள வேண்டுமே? அந்த ஊருக்குத் தற்செயலாக வியாபாரிகளின் குழு ஒன்று வந்தது. அவர்கள் காட்டு வழியாக வேறெங்கோ சென்று கொண்டிருந்தார்கள். அவன் அவர்களிடம் அனுமதி பெற்று அவர்களுடனேயே நடக்கலானான்.

(தொடரும்...)

## 11.2017 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖ 1942 - மசாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் இரவுவிடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயினால் 491 பேர் இறந்தார்கள்.
❖ 1964 - நாசா செவ்வாய்க் கோளை நோக்கி மரைனர் 4 விண்கலத்தை ஏவியது.
❖ 1987 - தென்னாபிரிக்காவின் விமானம் இந்தியப் பெருங்கடலில் வீழ்ந்ததில் அதில் பயணஞ் செய்த 159 பேரும் கொல்லப்பட்டனர்.
❖ 1989 - பனிப்போர்: செக்கோசிலவாக்கியாவின் தனியாதிக்க உரிமையை விட்டுத்தருவதாக அந்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது.
❖ 1990 - ஐக்கிய இராச்சிய தலைமை அமைச்சர் மார்கரெட். தாட்சர் தனது பதவியை விட்டு விலகினார்.
❖ 1990 - லீ குவான் யூ சிங்கப்பூர் தலைமை அமைச்சர் பதவியை விட்டு விலகினார். கோ சொக் டொங் புதிய தலைமை அமைச்சரானார்.
❖ 1991 - தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
❖ 1994 - ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய நோர்வே மக்கள் எதிர்த்து வாக்களித்தனர்.
❖ 2006 - நாசாவின் நியூ ஹரைசன்ஸ் தானியங்கி விண்கலம் புளூட்டோவின் முதலாவது படத்தை அனுப்பியது.

பிறப்புகள்

❖ 1293 - எசுன் தெமுர் கான், சீனப் பேரரசர். (இ. 1328)
❖ 1757 - வில்லியம் பிளேக், ஆங்கிலேயக் கவிஞர், ஓவியர். (இ. 1827)
❖ 1820 - பிரெட்ரிக் எங்கெல்சு, செருமானிய-ஆங்கிலேய மார்க்சிய மெய்யியலாளர். (இ. 1895)
❖ 1826 - மத்வேய் கூசெவ், உருசிய வானியலாளர். (இ. 1866)
❖ 1864 - ஜேம்ஸ் ஆலன், ஆங்கிலேய மெய்யியலாளர், நூலாசிரியர். (இ. 1912)
❖ 1901 - எட்வினா மவுண்ட்பேட்டன், மவுண்ட்பேட்டன் பிரபுவின் மனைவி : (இ. 1960)
❖ 1907 - ஆல்பர்டோ மொராவியா, இத்தாலிய எழுத்தாளர், இதழாளர். (இ. 1990)
❖ 1918 - வி. கே. வெள்ளையன், இலங்கை மலையகத் தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி. (இ. 1971)
❖ 1927 - எச். வி. ஹண்டே, தமிழக மருத்துவர், அரசியல்வாதி.
❖ 1945 - அமர்கோஸ்வாமி, இந்திய எழுத்தாளர், பத்திரிகையாளர்.
❖ 1961 - அல்போன்சா குயூரான், மெக்சிக்கோ இயக்குநர்.
❖ 1962 - யோன் சுருவாட், அமெரிக்க நடிகர்.
❖ 1967 - ஆன்னா நிக்கோல் இசுமித், அமெரிக்க நடிகை. (இ. 2007)
❖ 1976 - ரயன் குவான்டென், அவுஸ்திரேலிய நடிகர்.
❖ 1984 - மேரி எலிசபெத் வின்சுடீத், அமெரிக்க நடிகை.
❖ 1985 - சித்தார்த் வேணுகோபால், தமிழ்த் திரைப்பட நடிகர்.
❖ 1992 - ஆடம் ஹிக்ஸ், அமெரிக்க நடிகை.

இறப்புகள்

❖ 1694 - மட்சுவோ பாஷோ, சப்பானியக் கவிஞர். (பி. 1644)
❖ 1859 - வோஷிங்டன் இர்விங், அமெரிக்க எழுத்தாளர். (பி. 1783)
❖ 1872 - மேரி சோமர்வில்லி, இசுக்கொட்லாந்து-இத்தாலிய வானியலாளர், கணிதவியலாளர். (பி. 1780)
❖ 1890 - ஜோதிராவ் புலே, இந்திய மெய்யியலாளர், செயற்பாட்டாளர். (பி. 1827)
❖ 1893 - அலெக்சாண்டர் கன்னிங்காம், பிரித்தானியத் தொல்லியலாளர். (பி. 1814)
❖ 1925 - ஆல்பிரட் பெரோ, பிரான்சிய இயற்பியலாளர். (பி. 1863)
❖ 1939 - ஜேம்ஸ் நெய்ஸ்மித், கூடைப்பந்தாட்ட விளையாட்டைக் கண்டுபிடித்த கனேடியர். (பி. 1861)
❖ 1954 - என்ரிக்கோ பெர்மி, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய-அமெரிக்க இயற்பியலாளர். (பி. 1901)
❖ 1968 - எனிட் பிளைட்டன், ஆங்கிலேய எழுத்தாளர். (பி. 1897)
❖ 2009 - பொ. ம. இராசமணி, தமிழகத் தமிழறிஞர். (பி. 1936)

சிறப்பு நாள்

❖ விடுதலை நாள் (அல்பேனியா, துருக்கியிடம் இருந்து 1912)
❖ விடுதலை நாள் (மூரித்தானியா, பிரான்சிடம் இருந்து 1960)
❖ விடுதலை நாள் (பனாமா, எசுப்பானியாவிடம் இருந்து 1821)
❖ குடியரசு நாள் (புருண்டி)
❖ குடியரசு நாள் (சாட்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 100 | 140 | 160 | 180 |
| உருளைக்கிழங்கு | 80 | 50 | 50 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 450 | 700 | 800 | 800 |
| தக்காளி | 100 | 80 | 100 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 60 | 40 | 70 |
| கோவா | 180 | 130 | 160 | 200 | 140 |
| கரட் | 350 | 150 | 200 | 280 | 200 |
| பூசணி | 100 | 50 | 60 | 100 | 60 |
| புடோல் | 100 | 70 | 100 | 120 | 140 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 350 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 140 | 140 | 160 | 200 |
| பாகற்காய் | 500 | 250 | 350 | 400 | 350 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 40 | 80 | 80 | 70 |
| புடற்றங்காய் | 250 | 180 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 200 | 140 | 240 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 130 | 160 | 140 |
| கறிமிளகாய் | 200 | 300 | 320 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 120 | 200 | 400 |
| போஞ்சி | 200 | 110 | 150 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 140 | 160 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 50 | 40 | 60 |
| தேசிக்காய் | 50 | 50 | 80 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 70 | 75 | 60-100 | 100 |
| இராசவள்ளி | — | — | 60 | — | — |
| வெங்காயப்பூ | — | 250 | — | — | — |
| முள்ளங்கி | — | 70 | 40 | 120 | 80 |
| பொன்னாங்காணி | — | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | — | 10 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | — | — | 70 | 100 | 100 |

நெருங்கிய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் துரோகம் செய்பவர்கள் பலர் உள்ளனர். எனவே எச்சரிக்கையாய் இருங்கள். – மகாபாரதம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வாக்குவங்கியை தக்கவைப்பதுதான் தமிழ் அரசியல்வாதிகளின் ஒரே இலக்கு

தமிழ் அரசியல்வாதிகளின் ஒரே இலக்கு தமக்கான வாக்குவங்கியை பாதுகாப்பதுதான்.

தமிழ் மக்கள் எக்கேடு கெட்டாலும் அதுபற்றி அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதாக நிலைமை உள்ளது.

இதனால் தமிழ் மக்களின் எதிர்காலம் மிகவும் ஆபத்தானதாக அமையப்போவது தவிர்க்க முடியாது என்றாகிவிட்டது.

இடைக்கால வரைவு வெளிவந்திருக்கக் கூடிய சூழ்நிலையில், இடைக்கால வரைபில் விதைந்துரைக்கப்பட்ட விடயங்கள் தமிழ் மக்களின் உரிமை மற்றும் அதிகாரப் பகிர்வில் எவ்வாறான நிலைமை உள்ளதென்பதைப் பற்றி வெளிப்படுத்துவதே ஏற்புடையதும் பொருத்தமானதுமாகும்.

ஆனால் தமிழ் அரசியல் தலைமை அதனைச் செய்யாமல், தங்களுக்கு ஏற்றாற்போல் இடைக்கால வரைபுக்கு விளக்கமும் வியாக்கியானமும் கொடுக்கின்றனர்.

இது தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற மிக மோசமான விவகாரம் எனலாம்.

இடைக்கால வரைவு தமிழ் மக்களுக்குத் தருவதாக விதந்துரைக்கும் உரிமை என்ன என்பதில் பலதரப்பட்ட வாதங்கள் எழுமாக இருந்தால் இடைக்கால வரைபு தெளிவற்றது என்பது பொருளாகும்.

மாறாக இடைக்கால வரைபு தான் சொல்ல வந்த விடயத்தைத் தெளிவாகச் சொல்கிறது என்றால்,

அதற்குப் பொருள் கொடுப்பவர்கள்தான் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர் என்பதைத் துணிந்து கூறமுடியும்.

இடைக்கால வரைபின் விதப்புரை சமஷ்டி என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர் ஒருவர் கூறுகிறார். அதேநேரம் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார்.

இப்போது எமக்கு எழும் சந்தேகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர் பொய் சொல்கிறாரா? அல்லது இந்த நாட்டின் ஜனாதிபதி பொய் சொல்கிறாரா? என்பதுதான்.

சமஷ்டி என்ற சொற்பதம் நேரடியாக இடம் பெறவில்லையே தவிர, சமஷ்டிக்குரிய அத்தனை அதிகாரங்களும் இடைக்கால வரைபில் இருப்பதாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கூறிவருகிறது.

அப்படியானால் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம், எங்கள் தமிழர் தாயகத்தில் மத சார்பற்ற கொள்கை என்பன இருக்கின்றனவா? என்றால் அவை எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.

காணி அதிகாரம் அவர்கள் கையில், பொலிஸ் அதிகாரம் அவர்கள் கையில் இருக்கும்போது நாங்கள் என்ன செய்ய முடியும்?

எங்கள் தாயகத்தில் எங்கள் தமிழ்க் குடிக்கு எங்கள் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு காணித் துண்டை வழங்க முடியாது என்றால்,

போதைவஸ்தை, வாள்வெட்டுக்குழுவை உடனடியாகக் கட்டுப்படுத்துங்கள் என்று பொலிஸாருக்கு உத்தரவிடும் உரிமை இல்லை என்றால்,

இயங்குநிலையற்ற பொலிஸாரை இடமாற்றுவதற்கும் கொழும்புக்கு கடிதம் எழுதுவதுதான் விதி என்றால் சமஷ்டி எங்கே இருக்கிறது என்று கேட்பதில் நியாயம் இருக்கவே செய்யும்.

ஆக, தமிழ் மக்களின் வாக்குகளைத் தமதாக்குவதிலேயே தமிழ் அரசியல் தலைமையின் சிந்தனை இருக்கிறதேயன்றி தமிழ் மக்களுக்காக என்ற நினைப்பு அறவே இல்லை என்பதே உண்மை.

# பிரபாகரன் பிறந்தநாள் கொண்டாட்டம் தமிழ் - சிங்கள மாணவர் மோதல்

## யாழ்.பல்கலையின் வவுனியா வளாகம் காலவரையறையின்றி மூடப்பட்டது

(குருமன்காடு)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் நேற்று மாலை முதல் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வளாகத்தின் விடுதியில் முதலாம் வருட மாணவர்களால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த புகைப்படங்களை முகப்புத்தகத்தில் பதிவேற்றியதை தொடர்ந்து சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்கள் மீது தாக்கியதுடன் தமக்கு பாதுகாப்பு தருமாறு வளாகத்தின் முதல்வரிடம் இரவு 10.30 மணியளவில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந் நிலையில் சிங்கள மாணவர்கள் சமூக வலைத்தளத்தில் தமிழ் மாணவர்களை அச்சுறுத்தும் விதமான பதிவுகளை மேற்கொண்டமையினால் தமிழ் மாணவர்களும் வளாகத்தின் முதல்வரிடம் தமக்கான பாதுகாப்பை ஏற்படுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் பரீட்சை ஆரம்பமாகிய நேற்றைய தினம் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாடுகளை சமரசம் செய் வதற்கும் விசாரணைகளை நடத்துவதற்கும் ஏதுவாக வளாகத்தினை காலவரையறையின்றி மூட வளாகத்தின் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

இத்தகவலை அனைத்து மாணவர்களும்அறிந்து கொள்ளும் விதமாக வளாகத்தின் அனைத்து பீடங்களிலும் குறித்த அறிவித்தல் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.(ம-250)

# சிவாஜிலிங்கம் இராணுவத்தினரை நினைவுகூர வேண்டும் – சம்பிக்க

(கொழும்பு)

இராணுவத்தினர் வடக்கை மீட்டதன் காரணமாகவே அங்கு அரசியலில் ஈடுபட முடிந்துள்ளதாகவும் இதனால், சிவாஜிலிங்கம் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கு நினைவு நிகழ்வை நடத்த வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஜெய்க் ஹில்டன் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைசசர் இதனை கூறியுள்ளார்.

அமிர்தலிங்கம் முதல் யோகேஸ்வரன் வரையான தமிழ்த் தலைவர்களை கொன்றவர்கள் சிங்கள மக்களோ இராணுவத்தினரோ அல்ல எனவும் விடுதலைப் புலிகள் அமைப்பே அவர்களை கொன்றது என்பதை சிவாஜிலிங்கம் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சிவாஜிலிங்கம், பிரபாகரனை நினைவுகூருவாரேயானால், முப்பது வருட போரில் நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்கு அவர்கள் பொறுப்புக் கூறவேண்டும்.

தடைசெய்யப்பட்டுள்ள அமைப்பொன்றின் உறுப்பினர்களுக்காக சட்டவிரோதமாக நிகழ்வுகளை ஏற்பாடு செய்வார்களேயானால், அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.

பயங்கரவாதிகளை வீரர்கள் என கூறும் அனைவரும் பயங்கரவாதிகளாக இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது அப்பாவி நிராயுதபாணிகளான மக்களை நூற்றுக்கணக்கில் வீதிகளில் கொன்ற அமைப்பு என்பதை நினைவு தின நிகழ்வுகளை ஒழுங்கு செய்பவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (ம)

## வீதி விபத்து குடும்பப் பெண் மரணம்

ஓட்டமாவடி புகையிரத கடவையினூடாக சைக்கிளில் பயணித்த தம்பதிகள் விபத்திற்குள்ளான நிலையில் மனைவி உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று பிற்பகல் சம்பவித்துள்ளது.

சைக்கிளில் மனைவியை ஏற்றியவாறு தண்டவாளத்தை கடக்க முற்பட்டவேளை தண்டவாளம் சறுக்கியதால் மனைவி தரையில் விழுந்த சமயம் பின்னால் வந்த படிரக வாகனமொன்று தலையில் ஏறியது.

இதனால் சம்பவ இடத்திலேயே குறித்த பெண்மணி மரணமடைந்துள்ளார்.

குறித்த விபத்தில் மாஞ்சோலையை சேர்ந்த 40 வயதுடைய றழீனா என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### குழந்தைக்கு பெயர் சூட்டும் நிகழ்ச்சி?

நல்லதொரு சுப நாளைத் தேர்ந்தெடுத்து வேள்வித் தீ எழுப்பி கணபதி வழிபாடு, நவகோள்கள் வழிபாடு, அம்மையப்பர் வழிபாடு, புண்ணியாக வாசம் செய்து தொட்டிலை அலங்கரித்து புண்ணிய நீரைத் தெளித்து தமிழ் வேதியரிடமிருந்து தகப்பன் குழந்தையைப் பெற்று தாயிடம் கொடுக்கவேண்டும். பின்னர் தாயானவள் குழந்தையைத் தொட்டிலில் இடவேண்டும்.


அதன்பிறகு தேர்ந்தெடுத்த பெயரை மும்முறை சொல்லி குழந்தையை அழைக்க வேண்டும். தொட்டிலில் இடும் போதும் பெயரிடும் போதும் திருப்போரூர் சந்நிதிமுறை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ஆகிய பதிகங்களை தமிழ் அறிஞர்களைக் கொண்டு ஓதச் செய்யலாம். (தொடரும்)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு (கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC 16 2017
மண்ணில் பிறந்திட்ட மனிதருக்குள் பெண்ணென்றும் ஆணென்றும் பேதமில்லை.
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமைகாலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **வவுனியா பிரதேசததில** தவசிக்குளம் கிராமம் மதவு வைத்த குளம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- சொல்லால் விளக்க முடியாத மேம்பட்ட அன்பின் சாரமாக இறைவன் இருக்கிறான். அவனை நாம் உணர முடியுமே தவிர, அவனது அன்பின் தன்மையை யாராலும் விளக்கமுடியாது.
- இறைவன் ஒருவனே கொடுப்பவன். அவன் தரும் காசோலையைப் பெற்றுக் கொள்ளுங்கள். அதனை பணமாக்கிக் கொள்ளலாம்.
- நன்மை, உண்மைக்கு மிக அருகில் இருக்கிறது, ஆனாலும், அது இன்னும் உண்மையின் இடத்தை அடையவில்லை.
- மனிதர்கள் தீமையைக் கண்டு மனம் கலங்கக்கூடாது. உள்ள உறுதியுடன் எதிர்த்துப் போராட வேண்டும். அதேபோல, நன்மை கிடைத்துவிட்டதே என தலைகால் புரியாமல் ஆடவும்கூடாது. அமைதியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.
- உயிர்களில் உயர்ந்தவன் மனிதன். உலகங்களில் உயர்ந்தது மண்ணுலகம். மனிதனைவிட உயர்ந்த ஒரு கடவுளை நம்மால் கற்பனை செய்ய முடியாது. எனவே நமது கடவுள் மனிதனே.
- இறைவனின் திருநாமத்தை திரும்பத் திரும்ப சொல்வதே ஜபம். ஜபம் செய்வதன் மூலம் இறைவனின் எல்லையற்ற அருளை பக்தனால் அடையமுடியும்.

# மாவீரர் வெற்றிக் கிண்ணம் வாகை சூடியது நண்பர்கள் அணி







(பனிக்கன்குளம்)

மாற்றத்திற்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாவீரர் வெற்றிக் கிண்ணம் உடையார்கட்டு "நண்பர்கள்" அணி மகுடம் சூடியது.

மாற்றத்திற்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டாளர்களான யோ.சுதர்சன், ஆ.ஜோன்சன், சி.பிரதீபன் ஆகியோரின் தலைமையில் 25-26.11.2017 சனி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நண்பர்கள் விளையாட்டு கழகத்தில் நடைபெற்ற துடுப்பாட்டத் தொடரில் 14 அணிகள் கலந்துகொண்டன.

இறுதி ஆட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.இதில் நண்பர்கள் அணியும் சுதந்திரபுரம் மத்திய அணியும் மோதியது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நண்பர்கள் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 4 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றனர்.

அணி சார்பில் காந்தன் 50 ஓட்டங்களையும் கயன் 7 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் சுதன், ஜின்னா டில்றுக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளை கைப்பற்றியதுடன் தொடர்ந்து ஆடிய சுதந்திரபுரம் மத்திய அணியினர் ஆறு இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

வெற்றிபெற்ற அணிக்கான மாவீரர் கிண்ணத்தை வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் வழங்கி வைத்ததுடன் இரண்டாம் இடம்பெற்ற அணிக்கான கிண்ணத்தை மாற்றத்திற்கான இளைஞர் அமைப்பின் ஆலோசகர் என்.விஷ்னு காந்தன் வழங்கியதுடன் தொடர் ஆட்டநாயகனுக்கான கிண்ணத்தை மாற்றத்திற்கான இளைஞர் அமைப்பின் செயலாளர் ஆ.ஜோன்சன் வழங்கி வைத்தார்.

ஆட்டநாயகனுக்கான கிண்ணம் புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் சந்திரன் வழங்கி வைத்ததுடன் 2017 மாவீரர் வெற்றிக் கிண்ண நிகழ்வுகள் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (க-281)

# எல்லை மீறிய அன்டர்சன் அமைதியாயிருந்த கமரூன்

பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அன்டர்சன், அவுஸ்திரேலியா வீரர் கமரூன் பேன்கிராப்ட்டின் இடுப்பில் பந்தை எறிந்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 302 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், அவுஸ்திரேலியா 328 ஓட்டங்கள் எடுத்தது.

இதைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸ் ஆடிய இங்கிலாந்து, அவுஸ்திரேலிய வீரர்களின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 195 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, இதனால் அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றி இலக்காக 170 ஓட்டங்களை நிர்ணயித்தது இங்கிலாந்து.


அதன்பின் இரண்டாவது இன்னிங்ஸை துவங்கிய அவுஸ்திரேலியா நான் காம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 114 ஓட்டங்கள் குவித்தது

இந்நிலையில் இப்போட்டியின் போது, இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணியின் பந்து விச்சாளர், அன்டர்சன் விக்கெட் எதுவும் விழாத காரணத்தினால், அவுஸ்திரேலியா வீரர் கமரூன் பேன்கிராப்ட் அடித்த பந்தை, எடுத்து அவரை ரன் அவுட் செய்வது போல், அவரது இடுப்பில் எறிந்தார்.

ஆனால் கமரூன் பேன்கிராப்ட் ஆத்திரப்படாமல், பந்தை எடுத்து மீண்டும் அன்டசர்சனிடம் கொடுத்தார். (க)

# பாகிஸ்தானுடனான போட்டியை இந்திய அரசே முடிவெடுக்கும்

## டோனி தெரிவிப்பு



காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைதியையும், ஒற்றுமை உணர்வையும் வளர்க்கும் நோக்கில் பாரமுல்லா மாவட்டம் யூரி நகரில் இராணுவம் நடத்தும் கிரிக்கெட் தொடரில் 110 அணிகள் பங்கேற்றுள்ளன.

அதன் இறுதிப் போட்டியை இராணுவத்தில் லெப்டினன்ட் கேர்னல் பட்டம் அளித்து கௌரவிக்கப்பட்ட டோனி நேரில் கண்டுகளித்தார்.

இதனையடுத்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் ஒரு விளையாட்டு மட்டுமல்ல, அதற்கு மேலானது.

பாகிஸ்தானுடன் கிரிக்கெட் விளையாடலாமா, வேண்டாமா? என்பது குறித்து அரசே முடிவெடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எல்லை பயங்கரவாதம் காரணமாக பாகிஸ்தான் உடனான கிரிக்கெட் போட்டிகளை நடத்துவது இல்லை என இந்திய தரப்பில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் பலமுறை அழைப்பு விடுத்தும் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# இரண்டாவது டெஸ்ட் இந்தியா அபார வெற்றி இலங்கையின் நிலை பரிதாபம்







நாக்பூரில் நடைபெற்ற இந்திய, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா - இலங்கை இடையிலான 2ஆவது டெஸ்ட் நாக்பூரில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்சில் 205 ஓட்டங்களில் சுருண்டது. அஸ்வின் 4 விக்கெட்டும், ஜடேஜா மற்றும் இசாந்த் சர்மா தலா 3 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்கில் 610 ஓட்டங்கள் குவித்து, மூன்றாம் நாளான நேற்று முன்தினம் டிக்ளேர் செய்தது. தலைவர் கோஹ்லி 213 ஓட்டங்கள் விளாசினார். முரளி விஜய் 128 ஓட்டங்களும், புஜாரா 143 ஓட்டங்களும், ரோகித் சர்மா 102 ஓட்டங்களும் எடுத்தனர். இதன் மூலம் இந்தியா 405 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இதையடுத்து 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 21 ஓட்டங்கள் சேர்த்திருந்தது.

இந்நிலையில் நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து ஆடிய இலங்கை அணி, அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. கருணாரத்னே 18 ஓட்டங்களிலும், திரிமன்னே 23 ஓட்டங்களிலும், மத்யூஸ் 10 ஓட்டங்களிலும், டிக்வெல்ல 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். 7'5 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்தது இலங்கை அணி.

அதன்பின்னர் சண்டிமல் நிதானமாக ஆடி விக்கெட்டை காப்பாற்ற போராடினார். ஆனால், மறுமுனையில் விக்கெட்டுகள் சரிந்தன. சனக (17), பெரேரா (0), ஹேரத் (0) ஆகியோரை அஸ்வின் வெளியேற்றினார். இதனால், இலங்கை அணி தோல்வியை நோக்கி பயணித்தது.

இந்தப் போராட்டத்திற்கு மத்தியிலும் பொறுப்புடன் ஆடிய சண்டிமால் அரை சதம் கடந்தார். தொடர்ந்து ஆடிய அவர் 69 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் காமஜ் (0) ஆட்டமிழக்க, இலங்கை அணி 166 ஓட்டங்களில் ஆல் அவுட் ஆனது. இதனால் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அஸ்வின் 4 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தினார். ஜடேஜா, உமேஷ் யாதவ், இசாந்த் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.(ஐ)

# மாவீரர் நாள் - 2017 எழுச்சியின் சில பதிவுகள்


அம்பாறை - கஞ்சிகுடிச்சாறு


மட்டு. முடமாவடி துயிலுமில்லம்


மன்னார் துயிலுமில்லம்


ஈச்சங்குளம் துயிலுமில்லம்


உடுத்துறை துயிலுமில்லம்


கிளி/கனகபுரம் துயிலுமில்லம்


சாவகச்சேரி நகர் மத்தி


வல்வெட்டித்துறை தீருவில்


யாழ்.பல்கலைக்கழகம்


சாட்டி துயிலுமில்லம்


இரணைப்பாலை துயிலுமில்லம்



யாழ்.இந்துக் கல்லூரி சுற்றுவட்டம்

## ஒரு வீரத்தாயின் அஞ்சலி




மூன்று மாவீரரை பெற்று நாட்டுக்காக கொடுத்த வீரத்தாய் வவுனியா கோவில்புளியங்குளத்தில் தனது கணவரும் மாவீரர்களின் தந்தையும் நாட்டுப்பற்றாளருமான கதிர்காமு அவர்களின் சமாதியில் தனது வீரக் குழந்தைகளுக்கும், தனது பேரர்களான மாவீரர்களுக்கும், தனது ஊர் மாவீரர்கள் என 35 பேரின் நினைவாக சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.


கிழக்கு பல்கலைக்கழகம்


வான்படை மாவீரர்களுக்கு அஞ்சலி


பிரான்சில் மாவீரர் அஞ்சலி

படங்கள் : சோபிகா, சாளின், கிசோர், பனிக்கன்குளம் செய்தியாளர், குருமன்காடு செய்தியாளர், பொற்பதி செய்தியாளர், கரணவாய் செய்தியாளர், சாவகச்சேரி செய்தியாளர், புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர், பரந்தன் செய்தியாளர், கொழும்புத்துறை செய்தியாளர்.

**ஆங்கில வகுப்பு**

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(1492) M.Suren

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

**கிசாந் கல்வி நிலையம்**

இல. 70/1, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி யாழ்ப்பாணம்

(யா/கொட்டடி நமசிவாய முன்வீதியில்)

தரம் 6-11 வரையான G.C.E O/L வகுப்புக்களும் G.C.E A/L வகுப்புக்களும் எதிர்வரும் 02.12.2017 சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

G.C.E O/L :- தமிழ், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, ஆங்கிலம், புவியியல், வணிகமும் கணக்கீட்டு கல்வியும், ICT, குடியுரிமை, கடல்வளம், சிங்களம்.

G.C.E A/L :- அரசு அறிவியல், ICT, புவியியல், கணக்கீடு. அனைத்து வகுப்புகளும் குழுவகுப்புகளாகவும் (Group Classes) போன்றும் நடத்தப்படும். தனிப்பாட அனுமதியும் உண்டு.

நிர்வாகி : திரு. க.கலியுகன் BA (Hons), PGDE, M. Phil, SLPS-III

(1498) அதிபர் (யா/சென்ஜேம்ஸ் ம.வி) 077 595 8178



கல்வித்தகைமை வயதெல்லை இன்றி யாவருக்கும் பொருத்தமான பயிற்சி நெறி இப்பொழுது Colombo / Kandy இலும்



MOBILE PHONE REPAIRING COURSE

I PHONE, BLACKBERRY, SAMSUNG GALAXY, HTC, ANY CALL & (FRP) போன்ற PHONE களை UNLOCKING / FLASHING செய்தல் பற்றி விசேடமாக கற்பிக்கப்படும்.

Hotline: 0723402243, 0777461116

077 13 63 389, London Metropolitan College

No. 136, Palaly Road, Parameswara Junction, Jaffna.


## உள்ளூராட்சி...

ராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின் 15ஆம் நாளான நேற்றைய தினம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு, பெண்கள் மற்றும் சிறுவர் நடவடிக்கைகள், சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் தொடர்பிலான அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடு தொடர்பில் விவாதம் காலை ஆரம்பமானது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் பைசர் முஸ்தபா இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மோல்டா நாட்டின் உள்ளூராட்சி மன்ற மாநாடு நடைபெற்றது. இதற்கு இலங்கைக்கும் அழைப்பு கிடைத்தது.

ஜனாதிபதியின் அனுமதியுடன் மோல்டாவுக்கு சென்றேன். நாட்டைவிட்டு ஓடவில்லை. நாட்டின் தலைவரிடம் அனுமதி பெற்றேன். அமைச்சரவை ஆவணத்திலும் இதனை நான் குறிப்பிட்டேன். நான் சட்டத்தரணி. எனக்கெதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. நான் எனது பதவியை கேலிக்குட்படுத்த மாட்டேன்.

எனது ஜனாதிபதி சட்டத்தரணி பதவி பெறுமதிமிக்கதாகும். ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கே செயற்பட்டேன். நாட்டுக்கும் அரசியல் கட்சிக்கும் நீதியை நிறைவேற்றுவேன். தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு தயாரிக்கப்பட்ட போது, அது தொடர்பாக அனைத்து கட்சிகளுக்கும் தெளிவுபடுத்தினேன். வர்த்தமானியில் குறைபாடுகள் இல்லை. பொறுப்புடன் நான் இதனைக் கூறுகின்றேன். தற்பொழுது இடைக்கால உத்தரவே வழங்கப்பட்டுள்ளது.

மிகவும்பொறுப்புடன்உண்மையாக செயற்பட்டேன். பொதுமக்களுக்காக நீதிமன்றத்துக்கு செல்லத்தயார். குளறுபடியான வர்த்தமானி தயாரிக்கப்படவில்லை. சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு இதில் எந்தவித தொடர்பும் இல்லை என்றார். (ம)

## எவ்வித அரசியல்...

வெளிய குளம் மாவீரர் துயிலுமில்லம், தியாகவனம் மாவீரர் துயிலுமில்லம், உப்பாறு மாவீரர் துயிலுமில்லம். மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை மாவீரர் துயிலுமில்லம், தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம், வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லம், அம்பாறை மாவட்டத்தில் உடும்பன்குளம் மாவீரர் துயிலுமில்லம் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம், விசுவமடு தேரவில் மாவீரர் துயிலுமில்லம், துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம், அளம்பில் மாவீரர் துயிலுமில்லம், மணலாறு புனிதபூமி மாவீரர் துயிலுமில்லம், மணலாறு உதய பீடம் மாவீரர் துயிலுமில்லம், களிக்காடு மாவீரர் துயிலுமில்லம் இறுதியுத்தத்தில் சுதந்திரபுர மாவீரர் துயிலுமில்லம், தேவிபுர மாவீரர் துயிலுமில்லம், இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லம், பச்சைபுல்வெளி மாவீரர் துயிலுமில்லம், இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம், முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம் கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம்.

முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம் மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் மாவீரர் துயிலுமில்லம், ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம், பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், தென்மராட்சி கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம்.

தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லம் வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லம் உள்ளன. இவற்றில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத துயிலுமில்லங்களில் நினைவஞ்சலிகள் நடைபெற்றதோடு, இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களின் முன்னால் நினைவஞ்சலிகள் நடைபெற்றன.

கடந்த வருடத்திலும் பார்க்க இம்முறை பல ஆயிரக்கணக்கான மக்கள் துயிலுமில்லங்களுக்கு சென்று அஞ்சலி செலுத்தியிருந்தார்கள். கடந்த வருட மாவீரர் தினம் ஒவ்வொரு அரசியல் வாதிகளது ஏற்பாட்டில் நடைபெற்றிருந்த நிலையில் இம்முறை மக்களே முன்னின்று நடத்தியிருந்தனர்.

அரசியல் வாதிகள் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர். சில இடங்களில் அரசியல் கட்சிகளது ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றிருந்த போதிலும் அங்கும் போராளிகளின் பெற்றோரே பிரதான சுடரினை ஏற்றியிருந்தனர். (ம-4)

## கோப்பாய் துயி...

இதன்போது மாவீரர் ஒருவரின் தந்தை பொதுச் சுடரை ஏற்ற ஏனையோர் ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

குறித்த மாவீரர் துயிலும் இல்லம் கடந்த 2006ஆம் ஆண்டு முற்றாக உடைக்கப்பட்டு உயர் இராணுவ பாதுகாப்பு பிரதேசமாக அமைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## வாள்களுடன்...

சாவகச்சேரி பொலிஸாரின் வீதிச் சோதனையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் இன்றியே மோட்டார் சைக்கிளில் பயணித்ததாகவும் ஏதேனும் குற்றச் செயலைப் புரிவதற்காகவே அவர்கள் இவ்வாறு சென்றிருப்பர் என்று நம்பப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அத்துடன் அவர்களிடம் பொலிஸ் தரப்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. (ம)

## கோப்பாய் துயிலும்...

அதனை தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாவீரர்களின் பெற்றோர், உறவுகள் மற்றும் பொதுமக்கள் என பெருமளவானோர் இணைந்து தீபங்களை ஏந்தி மரியாதை செலுத்தியதுடன் மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

கோப்பாய் துயிலும் இல்லத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் துயிலும் இல்லவாயில்களை தமது வாகனங்களை வைத்து மறைத்திருந்ததுடன் அதிகளவான இராணுவத்தினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் அஞ்சலி நிகழ்வுகளை தமது ஒளிப்பட கருவியில் படம் பிடித்ததுடன் தீவிர கண்காணிப்பிலும் ஈடுபட்டிருந்தனர். (ம-9)


**காணி விற்பனைக்கு**

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு முன்பாக 100 மீற்றரில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0770427561 (C-523)

**சீரடி பாபா யாத்திரை**

நாட்கள் 5, ஆரம்பம் - 24.12.2017 சீரடி - 2 நாள், சனி சிங்கநாப்பூர், சென்னையில் ஒருநாள் சொப்பிங், உணவு, போக்குவரத்து மற்றும் அனைத்துச் செலவுகளும் உட்பட... விபரம் கேட்டறிக!

தொடர்புகளுக்கு : கலாநிதி ஸ்ரீறெங்கநாதன் 0777 680 102 (C-525)





இலவச கருத்தரங்கு

FREE HIGHER STUDY IN TAIWAN

மாணவர்களே ஒரு அரிய சந்தர்ப்பம்

CHANGE YOUR LIFE CONNECT WITH WORLD

எந்தவித கல்லூரி கட்டணமும் இன்றி உங்களுக்கான உயர் கல்வி (100 % இலவசம்)

தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் Taiwan நாட்டின் பல்கலைக்கழகத்தில் இலவசமாக படித்துக்கொண்டு குறித்த துறையில் வேலையும் செய்யமுடியும்.

உயர் கல்வி விபரங்கள்

- Department of Information technology
- Department of Tourism
- Department for Fashion Design

வயது எல்லை 18 - 22 வரை விண்ணப்பிக்க முடியும்

கல்வித்தகைமை O/L சித்தி போதுமானது.

குறிப்பிட்ட அளவான மாணவர்களே இணைய முடியும் என்பதால் உங்கள் பதிவை உறுதி படுத்த இன்றே அழையுங்கள்.

| | |
|---|---|
| திகதி | 2017 /12/03 (10.00 AM) |
| இடம் | LONDON METROPOLITAN COLLEGE JAFFNA. (EXPONET) |

உங்கள் பதிவு மற்றும் மேலதிக தகவல்களுக்கு : 071 41 50 995 / 077 4765990

LONDON METROPOLITAN COLLEGE

No 136, palali road, parameswara junction, Jaffna.

தினேஸ் பேக்கரியின் மேல்புறம்

TEL : 021 753 8395

(C-524)



**உடனடி வேலைவாய்ப்பு**

Dynamic Holding Lanka (PVT) LTD

கம்பனியில் முகாமைத்துவதுறையில் தொழில் புரிய ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ...!

- அனுபவம் அவசியமில்லை
- குறுகியகாலப் பயிற்சி
- O/L அல்லது A/L தகைமை
- நிரந்தர வேலைவாய்ப்பு

எம்முடன் இணையும் உங்களுக்கு பயிற்சியின் போது 12000 பின் 40000 மேல், தங்குமிடவசதி இலவசம். வெளி மாவட்டத்தாரும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு : 077 157 1699 077 408 3273

(1500)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

UK-550/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

(C-443)

V2 TRAVELS-0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**வீடு விற்பனைக்கு**

பருத்தித்துறை நகரில், பிரதான வீதிக்கு அண்மையாக பூதராயர் ஒழுங்கையில் நல்ல கல்வீடு விற்பனைக்கு உண்டு. விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

0778688305 (C-492)


இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.